
மாநாட்டுக்கு முன்:— தமிழரசு இயக்கத்துக்கு 10,000 உறுப்பினர்கள்!


விலே சதம் 25. தொலே பேசி: 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஐப்பசி 28உ (14-11-71) ஞாயிறு 1391 றம்ளான் 25 புத்தகம் 25 இதழ் 51

## தொகுதிதோறும் ஆகக் குறைந்தது 5 இயங்கும் கிளைகள்!

**அமைப்பை வலுப்படுத்த நடவடிக்கை; கடமை வீரர் நவம் பொறுப்பேற்ருர்!**

சனவரி இறுதியில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாட்டின் முன், கட்சிக்கு மேலும பத்தாயிரத்துக்கு குறையாத புதிய உறுப்பினர்களை சேகரிப்பதென்றும்

(11ம் பக்கம் பார்க்க)

**கல்வி அமைச்சரின் வட பகுதி விஜயம்**

# தமிழரசுக் கட்சி எதிர்த்து பகிஷ்கரிக்கும்!

### மத்திய செயற்குழுவின் ஏகமனதான முடிவு!



கல்வியமைச்சர் தமிழ் மக்களுக்கு அநீதிக்குமேல் அநீதி இழைத்து வருவதால் அவரது உத்தேச வடபகுதி வருகையை எதிர்த்து பகிஷ்கரிப்பதென்று தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

கல்வியமைச்சரின் உத்தேச வருகையை முற்றுகப் பகிஷ்கரிக்கும்படியும் அமைச்சருக்கு வரவேற்பு உபசாரங்கள் எதுவும் அளிக்கவேண்டாமெனவும், அப்படி யாராவது வரவேற்பு உபசாரம் அளித்தால், அவற்றைப் புறக்கணிக்கும்படியும் தமிழரசு செயற்குழு தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

செயற்குழுக் கூட்டத்தில் மிகவும் உணர்ச்சியுடன் உரையாற்றிய தமிழரசு தந்தை 'தமிழினத்தை அழித்தொழிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கும் கல்வியமைச்சர் யாழ்ப்பாணத்தில் ஆடம்பரமாக வரவேற்கப்பட்டாரென்ருல் நாம் இருந்தென்ன; இறந்தென்ன? கல்வியமைச்சருக்கு கறுப்புக் கொடிபிடித்து சிறைசெல்லவும் நான் தயார்' என்று ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இம்மாதம் 6ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின்

(2-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் அமைச்சராகிய நீங்கள் தமிழை புறக்கணிப்பது நீதியா?

### பதியுதீனுக்கு பண்டிதர் சாட்டை!

"அண்மையில் நடைபெற்ற அரசினர் தமிழ் ஆசிரியர் சங்க ஆண்டுக் கூட்டத்தில் சிங்களப் பகுதிகளில் முஸ்லிம் மக்களே தமிழை வளர்க்கிருர்களென நீங்கள் பேசிப் பெருமைப்பட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆனல் முஸ்லிம் அமைச்சர்களாகிய நீங்களும் உங்கள் அமைச்சும் தமிழைப் புறக்கணிப்பதை இன்னும் கைவிடவில்லையே. இதனை நான் பலமுறை உங்களுக்குச் சுட்டிக்காட்டியும் நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

'பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் கையொப்பமிட்டு அனுப்பிய 28-10-71ம் தேதி அழைப்பிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதில் ஆங்கிலத்துக்குக் கொடுக்கப்பட்ட இடந்தானும் தமிழுக்குக் கொடுக்கப்படவில்லை. தமிழ் ஆசிரியர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், தந்திகள், சுற்றறிக்கைகள் தனிச்சிங்களத்திலிருக்கின்றன. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள உங்கள் கிளை அலுவலகங்கள் ஆசிரியர்களுடன் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளுகின்றன. தமிழை மறந்துவிட்டன. தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு மறுமொழி சிங்களத்

(11-ம் பக்கம் பார்க்க)

**சோசலிசமாம் சோசலிசம்...!**

## தமிழனுக்கு பிண அறை மட்டும்!

1971-72க்குரிய நிதியாண்டில் இலங்கையின் பல மாகாணங்களிலும் கட்டப்படவேண்டிய கட்டடங்கள் பற்றிய விபரங்கள் சுகாதார அமைச்சினுல் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன்படி வடகிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும், 10,15 கட்டடங்கள் கட்டப்பட நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. ஆனல் வடமாகாணம் முழுவதற்கும் ஆக ஒரே ஒரு கட்டடத்துக்கு மட்டும் அனுமதி வழங்கியிருக்கிறது சுகாதார அமைச்சு— அதுவும் வட்டுக்கோட்டைத் தொகுதியில்உள்ள சங்கானையில்! என்ன அந்த பிரமாண்டமான கட்டடம் தெரியுமா? ஒரு பிண அறை! சங்கானை மருத்துவமனையில் பிண அறை கட்டவே அனுமதிக்கப்பட்டுள்ளது! சோசலிசம் எப்படிப் போகிறது பார்த்தீர்களா?

## இ. போ. ச. 'பேருந்துசாலை'ப் பெயர்களிலும் தமிழ் இல்லை!

மட்டக்களப்பு இ. போ. ச. பேருந்துச் சாலை (பஸ்டிப்போ) களுக்குரிய பேருந்துகளைத் தவிர்ந்த ஏனைய எல்லாப் பேருந்துகளிலும் அவ்வவ்வூர்ப் பேருந்துசாலைகளின் பெயர்கள் சிங்களத்தில் மாத்திரம் இடம்பெற்று வருகின்றனவே தவிர தமிழில் இடம் பெறுவதில்லை. இதனுல் ஒவ்வொரு இ.போ.ச. பேருந்துச் சாலைகளில் வேலை பார்க்கும் தமிழ் முஸ்லீம் ஊழியர்கள் உரியபேருந்துகள் எந்தெந்தச் சாலைகளைச் சேர்ந்தன என்பதை அறிவதில் மிகவும் அவதியுற வேண்டியுள்ளது.

இது விடயமாக இலங்கை தமிழணிச்சபை கண்டனத் திர்மானம் ஒன்றினை நிறைவேற்றியுள்ளது. ஒவ்வொரு பேருந்துகளிலும் பின்புற இலக்கத்தகடுகளுக்குச் சற்று மேலாக பேருந்துச்சாலைகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. இந்தப் பெயர்கள் தனிச்சிங்களத்தில் இருப்பதால் இ. போ. ச. ஊழியர்கள் மட்டுமன்றி தமிழ் முஸ்லிம் பொதுமக்களும் உரிய பேருந்துகள் எந்தெந்தச் சாலைகளைச் சேர்ந்தன என்பதை அறிய முடியாமல் இருக்கிறதென தமிழணிச்சபை சுட்டிக் காட்டியுள்ளது.

## இவை உண்மையா?

- வீரகேசரியுட்பட, தமிழ் பத்திரிகைகள் அனைத்துக்கும் அமைச்சர் குமாரசூரியரைக் கண்டிக்கும் பேச்சுக்களையோ, தீர்மானங்களையோ பிரசுரிக்கக் கூடாது எனப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதா?
- அமைச்சர் குமாரசூரியரின் தமிழ்த் துரோகக் கொள்கையை அடியொற்றி, தமிழரசுத் தலைவர்களின் பேச்சுக்களையும் செய்திகளையும் இருட்டடிப்புச் செய்வதும், தமிழரசாருடன் போட்டியிட்டு படுதோல்வியடைந்த வி. பொன்னம்பலம், வி. ஞோதன் போன்றவர்களுக்கு விளம்பரம் கொடுப்பதுவும் தான் ஏரிக்கரை தினகரனின் கொள்கையா?
- தினபதி ஆசிரியர் சிவநாயகம், தமிழரசுக்கட்சியை அழித்தொழித்த பின்னரே தான் ஓய்வெடுக்கப் போவதாகச் சமீபத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரிடம் கூறினுராம். குறிப்பிட்ட அப்பாராளுமன்ற உறுப்பினருக்கும் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமே இனி தினபதியில் பிரமாதவிளம்பரம் கொடுக்கப்படவிருப்பதாக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மற்ருேர் பாராளுமன்ற உறுப்பினருக்கு இரகசியமாகத் தெரிவித்தாராம்!

## "தமிழின உரிமைப்போரில் உயிர்விடவும் தயார்!"

### தங்கத்துரை சூளுரை!

"இந்தநாட்டில் வாழ்ந்து வரும் தமிழ்பேசும் இனத்தின் மூலாதார உரிமைகளுக்காகவே இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி நியாயமான முறையில் போராடி வருகின்றது. உரிமையை கேட்டு வாதாடுவது எப்படி துரோகமாகும்? நாங்கள் உரிமையைக்கேட்பது தவருனல் அதற்காக நாங்கள் எந்தத் துன்பத்தையும் ஏற்கத்தயாராக உள்ளோம், என்பதை இங்கு நான் எடுத்துக் கூற ஆசைப்படுகின்றேன்.

"வளமையடி வாழையாக வரலாற்றுப் புகழுடன் வாழ்ந்து வந்தது எங்கள் தமிழ் இனம். இதற்கு சரித்திரங்கள் சரியான சான்ருகும். இதையாரும் மறுக்கவோ மறைக்கவோமுடியாது. எங்கள் தமிழின் சிறப்பை வெளிநாட்டு அறிஞர்களே வாய்விட்டு [illegible] ருர்கள். பாரதி [illegible]

(11ம் பக்கம் பார்க்க)



## வரவு - செலவு திட்டமா?
## ஏழையின் வயிற்றிலடிக்கும் திட்டமா?

அரிசி சீனி மா
அதிக விலையாச்சே அம்மா!
நோயாளிக்குப்
மருந்து கிடையாதாம் சும்மா!
பெரேரா மாமா!
நாங்கள்
பிணி பிடித்துச் சாகலாமா?

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஏரிக்கரை ஏட்டின் ஏகாதிபத்திய வெறி!

பாகிஸ்தானுடன் இலங்கை கொண்டுள்ள இராசதந்திர உறவுகளை துண்டித்துக்கொள்ள வேண்டுமென்றும் "பங்களாதேஷை" இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டுமென்றும் கோரும் பிரேரணைகளை நமது உடுவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்போவதாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

தங்கள் விடுதலைக்காக இரத்தத்தை உறையவைக்கக்கூடிய எண்ணரிய தியாகங்களை செய்து அஞ்சாது — நிலைகுலையாது — போராடிவரும் ஏழரைக்கோடி வங்க மக்களுக்காக ஈழத்தில் முதற்குரல் கொடுத்த ஒரே கட்சி ஈழத்தமிழினத்தின் ஒரே விடுதலை இயக்கமான இலங்கைத் தமிழரசுக் கட்சியே என்பதை ஈழமும் உலகமும் நன்கு அறியும்.

35 இலட்சம் ஈழத்தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் போராடி வரும் இலங்கைத்தமிழரசுக்கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான நமது உடுவில் பா.உ. திரு. தர்மலிங்கம் அவர்கள் வங்க மக்களுக்கு தெம்பூட்டக்கூடிய மேற்கண்ட பிரேரணைகளைக் கொண்டுவருவது முற்றும் பொருத்தமும் பொருளும் நிறைந்ததாகவே விடுதலை விரும்பிகள் அனைவரும் கருதுகிறார்கள்.

திரு. தர்மலிங்கம் அவர்களின் பிரேரணைகள் இன்னும் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படவில்லை; இப்பிரேரணைகளையொட்டி இந்நாட்டு ஏனைய அரசியற் கட்சிகளின் கருத்துக்கள் என்ன? — அரசாங்கத்தின் கருத்தென்ன — என்பது இன்னும் தெளிவாக்கப்படவில்லை — ஆளுங்கட்சியின் ஓர் அங்கமான லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர்கள் சிலர் வங்காளதேசத்துக்கு ஆதரவு தெரிவித்தது மட்டுமல்ல — ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியிருக்கிறார்கள். மற்றோர் ஆளுங்கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி — வங்கதேசத்துக்கு பகிரங்கமாக இதுவரை ஆதரவு தெரிவிக்காவிட்டாலும் — ஆதரித்தே தீரவேண்டிய அரசியல் தத்துவ நெருக்கடி அதற்கு ஏற்பட்டே திரும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசிய கட்சி ஆகிய கட்சிகள் மதில்மேல் பூனையாக இருக்கின்றன இப்பிரச்சினை மீது!

இந்நிலையில் ஏரிக்கரை ஏடான சிலோன் டெயிலி நியூஸ்' திரு. தர்மலிங்கத்தின் வங்கதேச ஆதரவுப் பிரேரணைக்கு எதிராக நஞ்சு கக்கும் ஓர் ஆசிரியத் தலையங்கத்தை 6-11-71 இதழில் தீட்டியிருக்கிறது!

ஏரிக்கரை ஏட்டின் இந்த இழிந்த போக்குக்கண்டு நாம் ஆச்சரியமடையவில்லை; ஏனெனில் ஏரிக்கரை பத்திரிகைகள் இழிந்த பிற்போக்கு சிங்கள முதாலாளித்துவக் கும்பல் என்பது மட்டுமல்ல — விடுதலை உணர்ச்சியின் விரோதிகள் என்பதையும் நாமறிவோம்!

ஈழத்தமிழினத்தின் விடுதலைக் கிளர்ச்சிகளை இருட்டடிப்பு செய்வதிலும், திசை திருப்புவதிலும் தமிழினத்தின் உண்மையான தலைவர்களை புறக்கணித்து — தமிழ்த்துரோகிகளுக்கு முடிசூட்டி அவர்களை செயற்கை தலைவர்களாக்க முயலும் ஈனத்தனத்திலும் ஈடுபட்டிருக்கும் ஏரிக்கரைப் பத்திரிகைகள், வங்க மக்களின் விடுதலை போராட்டத்தை வரவேற்கும் என்றோ — வங்க விடுதலை கோரிக்கையை ஆதரிக்குமென்றோ எதிர்பார்த்திடுவது மடமைத்தனம்தான்!

**இன்று வங்க விடுதலையை ஆதரித்தால் — நாளை ஈழத்தமிழினத்தின் விடுதலைக் கோரிக்கையையும் ஆதரித்தே தீரவேண்டிய இக்கட்டான ஒரு நிலை ஏற்படும் என்பதை உணர்ந்துதான் ஏரிக்கரையும் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்கள் பலரும் வங்கதேசத்தை ஆதரிக்க இன்று மறுத்து வருகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்!**

ஆனாலும் ஏரிக்கரை ஏட்டுக்கு சில உண்மைகளை சுட்டிக்காட்டுவது நமது கடமையாகும்.

பாகிஸ்தான் என்பது ஏறத்தாழ பதின்மூன்று கோடி மக்களைக்கொண்ட ஒரு நாடு. இதில் ஏழரைக்கோடி மக்கள் வங்காளிகள். கிழக்கு பாகிஸ்தானில் இருக்கும் இவர்களே பாகிஸ்தானில் பெரும்பான்மை இனத்தினர். இந்த ஏழரைக்கோடி வங்க மக்களும் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து சென்றபின்னர் — அல்லது பிரிந்து செல்ல முடிவு எடுத்த பின்னர் — 'பாகிஸ்தான்' என்றொரு நாடு எப்படி இருக்க முடியும்? இயங்கமுடியும்?

ஏழரைக்கோடி வங்க மக்களும் பிரிந்த பின்னர் — எஞ்சியிருக்கும் நாட்டினை எப்படிப் 'பாகிஸ்தான்' என்று அழைத்திடமுடியும்? அதனுடன் நமது நாடு எந்த அடிப்படையில் இராசதந்திர தொடர்புகளைத்தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்க முடியும்?

இறுதியாக நடைபெற்ற பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் அதிக ஸ்தானங்களை கைப்பற்றிய கட்சி அவாமி லீக்; சனநாயக மரபுப்படி முழுப் பாகிஸ்தானின் ஆட்சிப் பொறுப்பையும் இன்று ஏற்றுக்கொண்டிருக்க வேண்டிய கட்சி அவாமி லீக்; இன்று முழுபாகிஸ்தானின் பிரதமராகவும் விளங்கவேண்டியவர் ஷேக்முஜிபுர் ரகுமான்.

பாகிஸ்தான் பிரதமராக விளங்கவேண்டிய ஷேக்முஜிபரை சிறையிலடைத்துவிட்டு — பாகிஸ்தானை ஆட்சிபுரிய வேண்டிய அவாமி லீக் பிரதிநிதிகளை காராக்கிருகத்துள் தள்ளிவிட்டு — ஏதேச்சாதிகாரமாக பாகிஸ்தானை ஆட்சி நடத்துகிறான் இராணுவ வெறியன் யஹியாகான். சனநாயகத்துக்கு குழிபறித்துள்ள அந்த வெறியனின் ஆட்சியுடன் சனநாயக நாடான நம் இலங்கைக்கு இராசதந்திர உறவு என்ன வேண்டிக்கிடக்கிறது?

**பாகிஸ்தானுடனான இராசதந்திர உறவுகளை உடனடியாகத் துண்டிப்போம்; பாகிஸ்தானில் மீண்டும் உண்மையான சனநாயகம் மலரும்போது — மக்கள் ஆட்சி தோன்றும்போது — தேவையானால் மீண்டும் நமது உறவுகளை புதுப்பிப்போம்; என்பதே நமது கருத்துமாகும்.**

இந்தியாவே இதுவிஷயத்தில் நடவடிக்கை எடுக்காதபோது நமக்கு மட்டும் என்ன அக்கறையென்று கேட்கிறது ஏரிக்கரைப் பத்திரிகை!

இது நகைப்புக்கிடமானது; ஒரு வீட்டில் கொலை நடந்தால் அயல் வீட்டுக்காரன் பேசாமலிருக்கிறானே; நமக்கென்னவென்று எதிர்வீட்டுக்காரன் வாழா இருக்கலாமா?

நமக்கு எது நியாயம் என்று படுகிறதோ அதை துணிச்சலுடன் செய்ய முன்வரவேண்டுமே தவிர — அடுத்தவன் அமைதியாக இருக்கிறானே என்று காரணம்காட்டி நாம் நீதியை அலட்சியப்படுத்துவது ஒருபோதுமே முறையாகாது!

'திரு: செல்வநாயகம் தனது சொந்த தமிழரசு முத்திரைகளை வெளியிட்டாரென்பதற்காக இந்தியா 'இலங்கைத் தமிழ் அரசை' அங்கீகரிப்பது எப்படி புருடாவாக இருக்குமோ அதேபோன்றதே 'பங்களாதேஷை' இலங்கை அங்கீகரிக்க வேண்டுமென்று கோருவதும்' — இப்படியாக எழுதுகிறது டெயிலிநியூஸ்!

பத்து இலட்சம் வங்க மக்கள் இதுவரை வங்க விடுதலைப் போரில் தங்கள் உயிரை இழந்து விட்டார்கள்

90 இலட்சம் மக்கள் சொத்து சுகங்களை — வீடுவாசல்களை இழந்து அகதிகளாக இந்தியாவுக்குள் அடைக்கலமாகி இருக்கிறார்கள்!

தங்கள் இரத்தத்தினாலும் — வியர்வையினாலும் — கண்ணீரினாலும், தியாகத்தினாலும் வங்க மக்கள் உருவாக்கியுள்ள வங்கதேசத்தை வெறும் புருடா என்று இதயமற்ற ஏரிக்கரை ஏடு வர்ணிக்கிறதென்றால் அதன் ஏகாதிபத்திய வெறி எவ்வளவு தூரம் தடிப்பேறியிருக்கிறதென்பது நமக்குப் புரிகிறது!

நாம் சொல்லக்கூடியது இதுதான்!

இதே ஏரிக்கரை ஏடு வங்கதேசத்தை வாழ்த்தி வரவேற்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

ஏனெனில் தியாகம் ஒருபோதும் வீண்போகாது என்பதிலும் விடுதலை உணர்ச்சியை நசுக்க முடியாதென்பதிலும் என்றும் உறுதியான நம்பிக்கையுடையவர்கள் நாம்!

# 'அத்தான்' கவிதைகள் புத்தகமாகும் உணர்ச்சிக் கவிஞரின் புரட்சிப் படையல்!



உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் 'அத்தான்' என்னும் புனை பெயரில் எழுதிவரும் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கவிதைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிடும் முயற்சியில் ரகுநாதன் பதிப்பகத்தினர் ஈடுபட்டுள்ளனர். பக்கத்துக்குப் பக்கம் அழகான ஓவியங்களுடன் இப்புத்தகம் அமையுமாம். 'அத்தானின்' கவிதைகளைக்கொண்ட இப் புத்தகம் 'நீராட்டு' எனும் பெயரில் வெளியிடப்படவிருக்கிறது.

'அழுக்குப்படிந்த தமிழ்ப் பெண்ணை இக்கவிதைகளால் நான் குளிப்பாட்டுகிறேன்; தமிழச்சி அழகான பண்பாட்டுக்குச் சொந்தக்காரி. அவளில் எந்த அழுக்குப் படிந்தாலும் அதை நான் பொறுப்பதற்கில்லை.

நீராட்டுவேளையில் அழுக்குப்படிந்த தமிழச்சியின் சில உடல் அங்கங்களை நான் காண்பது தவிர்க்கமுடியாததாகும். என்னுடைய வேலை நீராட்டு வேலை என்பதை மட்டும் நீங்கள் நினைவில் வைத்துக்கொண்டால் சரி.

தமிழ்த் தாதி ஒருத்தியைத் தாக்கியும் தமிழ் அலுவலகப் பெண் ஒருத்தியைச் சாடியும் நான் கவிதை பாடியபோது சிலருக்கு என் மீது வெறுப்பும் — கசப்பும் ஏற்பட்டதை நான் அறிவேன் நான் அவ்வாறு சாடிய தாதி 'ஒருத்திதான்' என்பதையும் அலுவலகப் பெண் 'ஒருத்திதான்' என்பதையும் ஏனோ என்னை எதிர்த்தவர்கள் உணரவில்லை

தமிழ்ப் பெண்கள் 'எல்லோரையும்' நான் என் கவிதைகளில் தாக்குகின்றேனா? இல்லையே!

நான் மட்டக்களப்பு மருத்துவ விடுதியில் ஒருமுறை நோயுற்று மருத்துவம் பெறத் தங்கியிருந்த வேளையில் நோயாளி ஒருவன் அளவுமீறிய நோயோடும் துன்பத்தோடும் துடித்துக் கத்திக்கொண்டிருந்தான். அந்த நேரத்தில் அங்கிருந்த தாதி ஒருத்தி அந்த நோயாளியைக் கவனிப்பதைவிட்டு டாக்டர் ஒருவரைத் தன் அறையில் 'கவனித்துக்' கொண்டிருந்தாள். அறையின் உள்ளிருந்து வந்த 'அவர்களின்' சிரிப்பும் 'குளு குளு' பேச்சும் அப்போது எனக்கு ஏற்படுத்திய ஆத்திரம் கொஞ்சமல்ல — அந்த அனுபவத்தையே 'தாதி அந்தாதி' என்னும் கவிதையாக நான் பின்பு எழுதினேன் அந்தக் கவிதை எல்லாத் தாதியரையும் அல்ல — தவறு விடும் தாதியரை மட்டுமே சாடுகிறது.

தமிழ்ப் பண்பாடு, உலகில் மிக நீண்ட காலமாக வாழ்ந்து கண்ட அனுபவங்களைக் கொண்டு தமிழினம் ஆக்கிக் கொண்ட தனிப்பெரும் பண்பாடாகும். பெண்ணுக்கு இப்பண்பாட்டில் பெரிய பங்குண்டு. அவளே தமிழ்ப் பண்பாட்டின் அத்திவாரமாக இருக்கிறாள். ஆனால் இன்று தமிழ்ப் பெண்களில் சிலர் என்ன பாடெல்லாம் படுகிறார்கள்?

என்னைப் பொறுத்தவரை தமிழ்ப்பெண்ணை நான் தெய்வமாக மதிக்கிறேன். தெய்வமே பேயாக மாறினால் எனக்கு ஆத்திரம் வராதா? 'நீராட்டு' கவிதைகள் இந்த ஆத்திரத்தின் வெளிப்பாடே! பேயாகிப்போன தெய்வத்தை பழையபடி தெய்வமாக்கும் பொருட்டு நான் பெரும் 'நீராட்டு' செய்கிறேன்!

— இவ்வாறு கூறினார் கவிஞர் காசி ஆனந்தன்.

# சோசலிச ஆட்சியில் நசுக்கப்படும் மக்களின் பரிதாப நிலை!

திருகோணமலையைச் சேர்ந்த 'பிளான்டன்ற் பொயின்ட்' கிராமத்தின் எல்லையில் நின்று தவிக்கும் மக்களின் காட்சி இதயமுள்ள ஒவ்வொரு மனிதனையும் கண்ணீர் சிந்த வைக்கிறது; தமிழனாகப் பிறந்த குற்றத்திற்காகத் தயவு தாட்சண்யமின்றி தாக்கப்பட்ட நிலையில் — படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் ஒரு வயோதிபத் தந்தை அவரது மகன், இன்னுமொரு வாலிபர் ஆகிய மூவரும் திருகோணமலை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனராம்!

உண்ண உணவைக்கூடப் பெற்றிடக்கொடுத்து வைக்காத நிலையில் பெண்களும் குழந்தைகளும் இராணுவத்தினரின் முற்றுகைக்குட்பட்டு இரண்டு நாட்களாக ஆகாரமின்றித் தவிக்கின்றனராம். 'சோசலிசம் தலைவிரித்தாடுகிறது'; திருகோணமலையெங்கும் அவலக்குரல் உருவில் — அக்கிரமத்தின் விளைவில்!

## தமிழரசுக்கட்சி...

1ம் பக்கத் தொடர்ச்சி

தலைமை செயலகத்தில் நடைபெற்றது. பண்டிதர் கா. பொ. இரத்தினம் செயற்குழுவுக்குத்தலைமைதாங்கினார்

கல்வியமைச்சரின் உத்தேச வடபகுதி விஜயம் பற்றியும் அதையொட்டி கட்சி எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் செயற்குழு நீண்ட நேரம் பரிசிலனை செய்தபின் பின்வரும் தீர்மானத்தை ஏகமனதாகநிறைவேற்றியது

### தீர்மானம் - (1)

"கடந்த ஆண்டு பல்கலைக் கழக பிரவேசத்தின் போது தரப்படுத்தல் என்னும் போர்வையில் தமிழ் மாணவர்களுக்கு இன அடிப்படையில் பாரபட்சம் காட்டி — தமிழ் மாணவர்களுக்கு சகல திறமையும் தகுதியும் இருந்தும் அவர்களது உயர் கல்வி வாய்ப்புக்களை வெட்டி வீழ்த்தி — பச்சைத் துரோகத்தை கல்வியமைச்சர் இழைத்ததனாலும்;

"ஆசிரிய பயிற்சி கலாசாலை பிரவேசத்திலும் தமிழ் மாணவர்களைத் திட்டமிட்டு ஒதுக்கியதாலும்;

"தென்னிலங்கையில் பல தமிழ் பாடசாலைகளையும் தமிழ்ப் பிரிவுகளையும் மூடி — தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்பையும், தமிழ் ஆசிரியர்களின் உத்தியோகவாய்ப்பையும்பறித்துவிடுவதனாலும்

"மலையக தமிழ் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தில் எவ்வித அக்கறையும் முயற்சியும் எடுக்காததனாலும்;

"திட்டமிட்டு, தமிழ் மொழிப் புறக்கணிப்பில் கல்வியமைச்சு ஈடுபட்டுவருவதனாலும்;

"இன்னும் பல வழிகளில் கல்வியமைச்சு, தமிழ் மக்களின் கல்வி முன்னேற்றத்தை பாழடித்து, தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைத்துவருவதாலும்;

"கல்வியமைச்சரின் உத்தேச வடபகுதி விஜயத்தை எதிர்த்துப் பகிஷ்கரிப்பதென்று தமிழரசுக்கட்சி செயற்குழு தீர்மானிக்கிறது;"

### தீர்மானம் - (2)

'தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினரின் நேரடி அழைப்பின்றியோ அல்லது அவருடன் கலந்தாலோசிக்காமலோ தமிழ்ப் பகுதிக்கு வருகை தரும் எந்த ஒரு அமைச்சரின் உத்தியோகரீதியான விஜயத்தையும் தமிழரசுக் கட்சி பகிஷ்கரிக்கும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமைத் தமிழில் இறை வழிபாடு!

## கோவை—இளஞ்சேரன்

“இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல ஒட்டாது. பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடைய தாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பலவகைத் தோத்திரப் பாடல்களைப் பாடுவித்தருளினீர்”:

மேற்காணப்படுவது கருத்துரை நல்க வேண்டும் எனும் எண்ணத்தில் எழுதப்பட்டதன்று. இறைவனிடமே பேசும் உணர்வில் எழுந்தது. ஒரு பட்டறிவின் அடிப்படைக் கருத்து இது.

இவ்வாறு எழுதியவர் தான் வெளிப்படுத்தும் கூற்றின் தன்மையை,

“வாய்மட்டிற் சொல்லுகின்ற வார்த்தையன்று;

இது என் மனமொத்துச் சொல்லிய வாய்மை”—

என்று விளக்கியவர். இவர் மொழித்துறையில் ஊக்கங் கொண்டவர் அல்லர். இறை அருளில் தோய்ந்தவர். அருளையும் பட்டறிவையும் குலழத்து ஆயிரக்கணக்கில் பனுவல் தீட்டியவர். தம் பாடல்களில் அருள் என்னுஞ் சொல் 3,738 இடங்களில் இயல்பாக அமையப்பாடியவர். அதன் இயல்பாகத் தம் பாடல்களுக்கு “அருட்பா” எனப்பெயர் சூட்டியவர். ஆம்; வள்ளலார் இராமலிங்க அடிகளாரது உள்ளம் வழங்கிய கருத்து இது. அதனை உணர்ச்சியின் சொற்றொடர் உருவம் எனலாம்.

மேலே காணப்பட்ட கருத்துரை வள்ளலார் இராமலிங்க அடிகளாரது என்ற உணர்வில் மீண்டும் ஒருகால் அன்பர்கள் படித்து மேலே செல்லலாம்.

வள்ளல் இராமலிங்க அடிகளார் இறைவன் அருளைப் பெறுதற்குத் துணையாகக் கொண்டது இனிமைத் தமிழ் மொழியையே. அவர்க்கு முன்னர் திகழ்ந்த சமயச் சான்றோர்களும் தமிழ் கொண்டே இறைவனை அணுகினர்.

### மொழிகளும் இறைவனும்

மொழிகள் யாவும் இறைவனால் ஒலிக்கப்பட்டவை என்பது சமயத்துறையினரது ஒருவகைக் கருத்து. அவை சான்றோரால் வழங்கப்படுங்கால், இறைவனது அறத்தைச் சொல்லவே பயன்படுத்தப்பட்டன என்பதும் சமயத்துறைக் கருத்தே. இதனைச் சைவப் பெருநூலாம் திருமந்திரத்தை வழங்கிய திருமூலர்,

“பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாட்டையும் அண்ட முதலான் அறம்சொன்ன வாறே”

என்று ஆகமச் சிறப்பை விளக்கும் பகுதியில் பாடினார். பதினெட்டு மொழியும் அண்ட முதல்வனாகிய இறைவனது அறத்தைக் கூறின. அறம் சொல்வதாவது வழிபாட்டு மந்திரமாகக் கூறுவதையும் உட்கொண்டதாகும். இப்பதினெட்டுள்ளும் சேர்ந்த மொழிகள் தமிழும் ஆரியமும். இவ்விரண்டும் இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை என்பர் சமயத்துறையினர். இறைவன் தமருகம் என்ற தனது தோற்கருவியின் ஒருபுறத்தில் ஒலியெழுப்பித் தமிழையும், மறுபுறத்தில் ஒலியெழுப்பி ஆரியத்தையும் வெளிப்படுத்தினன் என்பர். இவ்விரண்டு மொழிகளையும் சிவபெருமான் உமையம்மைக்கு அருளினார் என்பதாகத் திருமூலர் திருமந்திரம்,

“ஆரியமும் தமிழும் உடனே
சொல்லிக் காரிகை யார்க்குக்
கருணைசெய் தானே”

என்று பேசுகிறது. இவ்விரண்டு அடிகளும் ஆகமச் சிறப்பைக் கூறும் பகுதியில் உள்ளவை. இதன் மூலம் தமிழும் ஆரியமும் ஆகமமொழிகளே என்பதனைத் திருமூலர் உணர்த்தியுள்ளார். ஆகமம் என்பது முதல்வனது மொழி என்றும், சான்றுக்குரிய அறமொழி என்றும் பொருள்படும். எனவே, தமிழும் ஆரியமும் முதல்வனது மொழிகள்; சமயத்தொடர்பில் சான்றுக்குரிய மொழிகள் என்றாகின்றன. சமயத்துறையினர் ஒருபடி மேலே சென்று இவ்விரண்டு மொழிகளும் இறைவனது இரு கண்கள் என்பர். அதனினும் மேலே சென்று இறைவன் இவ்விரு மொழிகளாகவே உள்ளான் என்று சமயச் சான்றோர் பாடியுள்ளனர்:

இறைவன்;

“ஆரியம் தமிழோடு இசையானவன்”—என்றும்;

“வானவன்காண் வானவர்க்கும் மேலானேன் காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண்”

என்றும் திருநாவுக்கரசர் உள்ளம் குழைந்து அறிவிக்கின்றார்;

“செந்திறந்த தமிழோசை வடசொல்லாகி” என்று நம்மாழ்வாரும் தம் திருவாய் மொழியில் அறிவித்துள்ளார்.

இவ்வாறே இவ்விருமொழிகளையும் இணைத்தும் தனித்தும் இறைவனோடு தொடர்பு படுத்திப் பல அருமறை ஆன்றோரும், சமயச் சான்றோரும் சிற்றிலக்கிய நூலாரும், தனிப்பாடல் தந்தாரும் பாடியுள்ளர். இவை கொண்டு தமிழும் ஆரியமும் இறைவனுக்கு உகந்த மொழிகள் என்பது அறியப்படும். இரண்டும் பாடிப் பரவுதற்குரிய தகுதி வாய்ந்தவை; போற்றித் தொழுதற்குரிய ஏற்றங் கொண்டவை; அருச்சித்து வழிபடற்குரிய மந்திரமானவை ஆகும். இரண்டும் தெய்வ மொழிகளே எனலாம்.

இவ்வாறிருந்தும், ‘இவ்விரு மொழிகளிலும் ஆரிய மொழி ஒன்றுமே மறை மொழி; அதன்கண் உள்ளனவே மந்திரங்கள்; அஃதொன்றே அருச்சனை செய்து வழிபடற்கு உரியது; எனவே, ஆரிய மொழியே தெய்வமொழி தேவபாடை’ என்று தமிழர்களே நம்பும் நிலை வந்தது. கோவில்களில் இறைவன் திருமுன் அணுக்க மொழியாய் ஆரியமாம் வடமொழியே நடைமுறை மொழியாயிற்று. அசைக்க முடியாமல் நிலை பெற்றது. தமிழர்தம் குறைபாட்டால் நேர்ந்த வியப்புகளில் இஃதும் ஒன்று;

‘காற்செருப்பைப் பிறனொருவன்
கழிவிடத்தில் தள்ளிடினும்
பொறுத உள்ளம்

மேற்படுத்தும் எவற்றினுக்கும்
மேற்பட்ட தன்மொழியைத்
தமிழைத் தீயோர்

போற்றுவதற் குரியதொரு
பொதுவினின்று நீக்கி
வைத்தால்
பொறுப்ப துண்டோ?’

—என்று பா... வில் பொறுக்க இயலா... நிலை என்று கூற வேண்டும்.

இவ்வியப்பு எவ்வாறு நேர்ந்தது? இவ்வகை வினு எழ எவ்வகை நிகழ்ந்தது!

### கோவிலும் வழிபாடும்

மிகத் தொன்மை நாளில் இறைவனுக்குக் கோவில் இல்லை; இயற்கை மரத்தின் அடியிடமே இறைவன் அமரும் இடமாக இருந்தது. ஆலமரத்தின் கீழிருந்து அரன் ஐயந்தீர்த்தான். அரசமரத்தின் அடியில் அமர்ந்து புத்தன் அறம் கண்டான். அசோக மரத்தின் அரும் நிழலில் அருகன் அறம் உரைத்தான். இவற்றின் குறிப்பாகவே மக்கள் மரத்தின் கீழ் இறைவனை அமர்த்தி வழிப்பட்டனர்.

இதன் அறிகுறியாக இன்றும் ஒவ்வொரு கோவிலிலும் ஒவ்வொரு மரம் “தலவிருட்சம்” என்னும் பெயரில் திருமரமாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

காலப் போக்கில் இறை உருவைத் தூய்மையாகப் பேண விரும்பிச் சிறு குடில்களாக சிறு இல்லங்களாக அமைத்தனர் இறைவனும் கோ அமரும் இல் கோவில் ஆகியது. படிப்படியாகக் கதைகள் பிறந்தன; கரணங்கள் தோன்றின; புராணங்கள் எழுந்தன. ஆயினும், மக்கள் தாமே நீரும் பூவும் கொண்டு சென்று இறைவனை வழிபட்டனர். பூ நீரோடு படைக்கும் அமுதாம் பலிப்பொருளும் இணைந்தது இறையன்பர்கள் தாமே இறைவனை நீராட்டினர். மலர்களை இறைவன் திருவடியில் குவியலாகப் படைத்தனர் பலிப்பொருளையும் திருமுன்வைத்தனர். தம்குறை சொல்லியும் குறையற்ற இறைவனின் நிறைகுணம் பேசியும் போற்றினர். தம் உள்ளத்து உணர்வைத் தம் வாயால்—வாய்மொழியாம் தாய்மொழியால் வெளியிட்டு ஏத்தினர். மலரை இருகை நிறைய ஏந்திக் குவியலாகப் படைக்கும் வழிபாடே தமிழர்தம் வழிபாடாக இருந்தது.

மலர்ப் படைப்பையும் ஏத்துதலையும் இணைத்து ஒவ்வொரு போற்றுதலுக்கு ஒவ்வொரு மலராக இடும் பழக்கத்தை உண்டாக்கினர் பிறர். இஃது என்று வடமொழிச்சொல்லே இம்முறை வடமொழியாளர் ஏற்படுத்தியது என அடையாளம் கூறிநிற்கிறது:

இந்நிலையில் தமிழில் மந்திரம் சொல்லி வழிபடுவதற்குத் துணையாகப் போற்றிகள் உருவாயின.

“மந்திரம் கொண்டு வழிபடுவோர்க்குச் சுந்தரநாதன் சொல்லிய மந்திர” மாம் “மந்திரம் முந்நூறு”

என்னும் நூல் எழுந்தது: சுந்தரநாதன் என்னும் இயற்பெயருடைய திருமூலர் இந்நூலை உரைத்தார் என்பதை,

‘மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்’—என்று திருமந்திர இறுதிப் பாடல் அறிவிக்கிறது. இவ்வாறு ஒரு நூல் உருவானதைக்கொண்டு இறைவழிபாட்டில் வடமொழி ஆட்சிக்கு மாற்றாக அக்காலத்திலேயே உணர்வு எழுந்ததாகவும் கொள்ளலாம்.

மக்களே தாமே நீராட்டி, மலர் படைத்து ஏத்தும் முறைதேவார மூவர், திருவாதவூரர், திருமூலச் சான்றோர் காலத்திலும் இருந்ததை அவர்களது வாய்மொழிகள் பேசுகின்றன:

‘பூவும் நீரும் பலியும் சுமந்து
புகலூரரையே நாவினாலே
நவின்று ஏத்தல் ஓவார்’
—திருஞானசம்பந்தர்.

‘பூவோடு நீர்சுமந்து ஏத்திப்
புகுவார்’
—திருநாவுக்கரசர்.

‘குடம் எடுத்து நீரும் பூவும்
கொண்டு’
—சுந்தரர்.

‘பரந்து பல் ஆய்மலர் இட்டு
முட்டாது அடியே இறைஞ்சி,
இரந்த எல்லாம் எமக்கே
பெறலாம் என்னும் அன்பர்
—மாணிக்கவாசகர்.

‘சிறப்பொடு பூ நீர் திருந்த
முன் ஏந்தி’
—திருமூலர்.

இவர்கள் காலத்தில் மக்கள் தாமே வழிபாடியற்றும் வழக்கத்தோடு வடமறை மந்திரமும் ஓதி அருச்சிக்கும் பழக்கமும் ஆங்காங்கு தலையெடுத்தது.

‘மறைகலந்த மந்திரமும்
நீரும் கொண்டு வழிபட்டா
வான் ஆளக் கொடுத்தி
அன்றே’
—என்கிறார் அப்பரடிகள்.

பல்லவர் ஆட்சி தமிழகத்தில் தலையெடுத்தபோது வடமொழிக்கும் வடமொழியாளர்க்கும் ஏற்றம் கிடைத்தது. பல்லவ மன்னர்கள் வடமொழியைப் போற்றி வளர்க்க இயலுவன செய்தனர். வடமொழியாளரை மிக மதித்து வந்தனை செய்தனர். பல்லவர்களது பேராதரவோடு இறைவனது திருக்கோயில்களில் வடமொழி ஒன்று ஆட்சிபெறும் நிலை வேரூன்றியது. வடமொழி ஒன்றே தெய்வமொழி—தேவபாடை எனும் கருத்து நிலைத்தது.

வடமொழி ஆட்சி இறைவனது அணுக்கத்தில் திகழ்ந்தது. ஆயினும், கோயிலில் தமிழுக்கும் இடமிருந்தது; கருவறையில் அன்று; அதற்கு இப்பாற்பட்ட எல்லையில் இடம் ஒதுக்கப்பட்டது; இறைவனின் திருவுலாவில் வடமொழியே அணுக்கமாய் ஒலித்தது. தமிழ் ஒரு கோடியில் இசைத்தது.

இந்நிலையில்தான் நாம், இறைவழிபாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்பைக் காணவேண்டியவர்கள் ஆகின்றோம்; இறைவனுக்கும் தமிழ் மொழிக்கும் இயைபு என்ன? தமிழ்ச் சான்றோர் இறைவன் தொடர்பில் தமிழுக்கு எத்தகுதியைக் கண்டனர்? சமயத்துறையினர் கொண்ட தமிழ் உளப்பாங்கு எத்தகையது? இவ்வினாக்களின் விடைகளில்தான் தமிழ் வழிபாட்டு முறை இயற்கையாகவே வலுப்பெறுகின்றது.

### தமிழின் தகுதி

“இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்”—என்று பிங்கலநிகண்டு தமிழுக்குப் பொருள் கூறுகின்றது. தமிழ் இனிமை என்னும் பொருளது. நீர்மை என்ற பொருளால் நீரின் தன்மையாகிய தண்மையைக்கொண்டது;

(11-ம் பக்கம் பார்க்க)

## “பரமடம்பாய நமாஹ”

இன்றைக்குத் தமிழ் அர்ச்சனைக்கு எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது! தமிழ் அர்ச்சனை—இப்போது கழக ஆட்சியில் வந்ததா?

1953-ஆம் ஆண்டே தமிழ் அர்ச்சனை துவங்கப்பட்டது. 1961-ஆம் ஆண்டு மதுரைக் கோவிலில் தமிழ் அர்ச்சனை துவக்கப்பட்டது.

அப்போதெல்லாம் சும்மா இருந்தவர்கள்—தமிழ் அர்ச்சனையை விரிவு படுத்தும் கழக அரசின் செயலைக் கண்டிக்க வருகிறார்கள்!

தமிழில் அர்ச்சனை செய்தால் புரிகிறது; வடமொழியில் அர்ச்சனை செய்தால் பலருக்குப் புரிவதில்லை!

தமிழிலும், வடமொழியிலும் புலமை பெற்ற நாவலர் சோமசுந்தர பாரதியார் தான் அவரது திருமணத்தில் நடந்த ஒரு செய்தியைச் சொல்வார்.

அவரது திருமணத்தில் ஒருபுரோகிதர் மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார். பாரதியார் திடீரென அந்தப் புரோகிதரைப் பார்த்து “நிறுத்து உன் மந்திரத்தை!” என்றார். “ஏன்?” என்று கேட்டார் புரோகிதர்!

“எனக்கும் வடமொழி தெரியும்! நீர் எந்த மந்திரத்தைச் சொல்கிறீர்? கல்யாணத்தில் சொல்ல வேண்டிய மந்திரத்தை சொல்லாமல் உத்திரகிரியை (கருமாதி) மந்திரத்தைச் சொல்கிறீரே!” என்றாராம் பாரதியார்!

இப்படிச் சொல்பவருக்கும் புரியாமல் கேட்போர் பலருக்கும் புரியாமல் அர்ச்சனை செய்யப் படுவது சரிதானா?

குன்றக்குடி அடிகளாரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஒரு செய்தியைச் சொன்னார்.

வடமொழியில் ஆண்டவனைப்பற்றி அர்ச்சனை செய்கிறபோது “டம்பாயக நமாஹ!” என்பார்களாம்!

டம்பாச்சாரியான கடவுளே—என்று அர்த்தமாம்!

அனாதை ரட்சகனே! ஆபத்பாந்தவனே! எளியோர்க்கும் இரங்கும் எளியோனே!—என்று ஆண்டவனை எளிய இனிய இயல்பு உள்ளவனாகக் காட்டுவது தான் சரி’

ஆனால் வட மொழியிலோ-டம்பாயக நமாஹ என்கிறார்கள்!

அதுமட்டுமல்ல — அடுத்த வரியில் பரமடம்பாயக நமாஹ என்று கூறுகிறார்களாம்! சுத்தமான ஆடம்பரப் பிரியனே!- என்று அதற்குப் பொருள்!

அது எப்படியாயினும் நாம் தமிழ் அர்ச்சனை வேண்டும் என்று கேட்பது கேரளத்தில் அல்ல! கர்நாடகத்தில் அல்ல!

தமிழ் நாட்டில் தமிழர்களாகிய நாம் தமிழ் அர்ச்சனை வேண்டும் எனக் கேட்கிறோம்.

—கலைஞர் மு. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ-தமிழக உறவுக்கு மீண்டும் உலைவைக்க முயற்சி!

## இது எப்படியாவது தடுக்கப்பட வேண்டும்

முன்னர் புகைந்து தணிந்த பிரச்சினை இப்பொழுது மீண்டும் புகையத்தொடங்கி விட்டது. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததை அடுத்து தமிழக ஏடுகளுக்குத் தடை விதிக்க முயன்றதும், தமிழ் மக்களது பலத்த எதிர்ப்பினால் அம்முயற்சி பின்னர் கைவிடப்பட்டதும் பழைய கதை!

இப்பொழுது மீண்டும் இப் பிரச்சினையில் கைவைத்து அரசாங்கம் வேடிக்கை பார்க்க முயன்றிருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து இங்கு இறக்குமதியாகும் எல்லாத் தமிழ்த் தினசரிகளையும் முற்றாகத் தடைசெய்வதென்றும், சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்துவதென்றும் முடிவெடுத்திருக்கிறார்களாம்!

ஆமாம்! இந்த நாட்டுத் தமிழர்களது எத்தனையோ உரிமைகளைப் படிப்படியாகப் பறித்த அரசாங்கம் கடைசியில் அவர்கள் விரும்புவதைப் படிக்கின்ற உரிமையில்கூட கைவைக்க முயன்று விட்டது.

தினசரிகளையும் சஞ்சிகைகளையும் தடைசெய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கத்தரப்பில் கூறப்படுகின்ற முக்கிய காரணங்கள் இரண்டாகும்:

ஒன்று, ஈழத்துத் தமிழ்த் தினசரிகள், சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு உதவுவது! (ஆகா! ஆகா!)

இரண்டு, பெருந்தொகையான அந்நியச் செலாவணி இதற்காக ஆண்டுதோறும் வீணாகிறதாம்!

இந்த இரண்டு காரணங்களும் எவ்வளவு தவறானவை என்பதையும், இந்த விவகாரத்தில் அரசாங்கத்தினதும் அரசாங்கத்துக்குத் துணை நிற்பவர்களதும் உண்மையான உள்நோக்கம் என்ன என்பதையும் நான் சொல்லித்தான் யாராவது தெரிந்துகொள்ளவேண்டும் என்றால், இதோ சொல்லுகிறேன்.

முதலாவது காரணத்தை எடுத்துக்கொள்வோம்—

தமிழ் ஏடுகளின் வளர்ச்சியில் அரசாங்கத்துக்கு உண்மையான ஆர்வம்—அக்கறை இருக்கிறது என்று யாராவது நெஞ்சில் கைவைத்துச் சொல்லமுடியுமா?

தமிழரை ஒதுக்கித் தள்ளுவதையும், தமிழைப் புறக்கணிப்பதையுமே நாளிலும் பொழுதிலும் செய்துவரும் எமது அரசுக்கு தமிழ் ஏடுகளின் வளர்ச்சியில் அக்கறை இருப்பதாகச் சொல்லுவது எவ்வளவு மடைத்தனம்.

இப்படியெல்லாம் சொன்னால் அது வகுப்புவாதம், அதனால் குமாரசூரியருக்கும் பொதுவுடமைவாதிகளுக்கும் குணசேனாக் கும்பல்களுக்கும் பொல்லாத கோபம் வரக்கூடும். அதனால் அரசாங்கத்துக்கு அதில் உண்மையான அக்கறை இருப்பதாகவே வைத்துக் கொண்டு கவனிப்போம்:

ஈழத்துச் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு தமிழக ஏடுகளைத் தடைசெய்வதும் கட்டுப்படுத்துவதும் மட்டுமா வழி? அதற்குமுன் அரசாங்கமே அவைகளுக்கு எத்தனையோ உதவிகளை நல்கலாமே! அதையெல்லாம் எமது எழுத்தளர்களும் பல தடவைகள் பன்னிப் பன்னிக் கேட்டிருக்கிறார்கள். அவைகளில் சில வருமாறு—

(1) இங்கு சஞ்சிகைகள் வெளியிடுபவர்களுக்கு நியாயமான விலையில் அச்சிடும் காகிதங்கள் கிடைக்க வழி செய்வது.

(2) சஞ்சிகைகளில் ஒரு தொகையை அரசாங்கம் வாங்கி, அவைகளை நாட்டிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு விநியோகிப்பது.

(3) அரசாங்க, கூட்டுத்தாபனங்களின் விளம்பரங்கள் இவைகளுக்கும் கிடைக்க வழி வகுப்பது:

இதுபோன்ற பல திட்டங்களில் ஒன்றுகூட எமது தமிழ் சஞ்சிகைகளுக்குக் கிடைக்க அரசாங்கம் எள்ளத்தனை முயற்சிகூட எடுத்ததில்லை. மாறாக சஞ்சிகைகளைப் பெரிதும் பாதிக்கக்கூடிய விதத்தில் ஐந்து சதமாக இருந்த 'நூல் அஞ்சல்' கட்டணத்தை இந்த அரசே 'பெரிய மனது' வைத்து பத்துச் சதமாக உயர்த்தியிருக்கிறது:

இரண்டாவது காரணம், அந்நியச் செலாவணி வீணாகிறது என்பது!

அந்நியச் செலாவணி குடிவகைகளுக்கும் போதைப் பொருட்களுக்கும் வீணாகலாம்; ஆனால் அது தமிழர்களின் ஏடுகளுக்காக விரையமாகக் கூடாதாம்!

எந்த அந்நிய நாட்டிலிருந்தும் எந்தத் தினசரிகளும் சஞ்சிகைகளும் வரலாம்.

**பொ.சண்முகநாதன்**

ஆனால் தமிழ் நாட்டிலிருந்து தமிழ் தினசரிகளும் சஞ்சிகைகளும்தாம் வரக்கூடாதாம்!

ஏன், தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற ஆங்கில ஏடுகளுக்குக்கூட தடை இல்லையாம். தமிழ் ஏடுகளுக்குத்தான் தடையாம்!

தமிழர்களுக்கு- தமிழ் ஏடுகளுக்கு என்றால் அந்நியச் செலாவணி மறுக்கப்படும் காரணம் என்ன? இதற்குப் பெயர்தான் சோசலிசமா?

தமிழ் ஏடுகளுக்காக விரையமாவதாகக் கூறப்படும் அந்நியச் செலாவணி அவ்வளவும் இங்குள்ள தமிழர்களுடையதே தவிர அரசாங்கத்தினதோ அல்லது அரசாங்கத்தின் தடை—கட்டுப்பாடு திட்டங்களுக்கு துணைபோகிறவர்களுடையதோ அல்ல. எந்த ஒரு தமிழனும் தனது சொந்தப்பணத்தையே—அதுவும் சொந்த அறிவோடுதான் ஏடுகளுக்காகச் செலவிடுகிறான் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

தமிழகத் தினசரிகள் சஞ்சிகைகளைத் தடைசெய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இன்னொரு துணைக் காரணமும் சொல்லப்படுகிறது.

இலங்கையில் நான்கு தமிழ்த் தினசரிகள் இருப்பதால் தமிழகத் தமிழ்த் தினசரிகளை முற்றாகத் தடைசெய்யலாமாம். அதுபோல் இங்கு வார, மாத சஞ்சிகைகள் போதியளவு தோன்றியதும் இப்பொழுது கட்டுப்படுத்தப்படவிருக்கும் தமிழகசஞ்சிகைகளும் பின்னர் தடைசெய்யப்படுமாம்.

இதை ஒரு முட்டாள்தனமான கருத்து என்பதைவிட வெட்கங்கெட்ட கருத்து என்பதே மிகவும் பொருத்தமாக இருக்கும். அதாவது தமிழக ஏடுகள் எமக்கு ஏணி போல் பயன்படவேண்டும் என்கிறார்கள். தேவை முடிந்ததும்—மேலே ஏறியதும் நன்றிகெட்ட முறையில் அவைகளை எட்டி உதைத்து விடவேண்டுமாம்!

இது ஒருபுறம் இருக்க, 'அறிவு' சம்பந்தமான தினசரிகள், சஞ்சிகைகளைப் பற்றிக் கூறும்போதாவது அக் கருத்தில் சிந்தனைத் தெளிவு இருக்கவேண்டும் என விரும்புகிறோம்.

'வீரகேசரி இருக்கும்போது தினகரன் எதற்காக? இரண்டும் தினசரிகள் தானே!'

'வீரகேசரியும் தினகரனும் இருக்கும்போது ஈழநாடு அவசியமா? மூன்றுமே தினசரிகள்தானே!'

'வீரகேசரியும் தினகரனும் ஈழநாடும் இருக்கும்போது தினபதி தேவையா? எல்லாமே தினசரிகள்தானே!'

இப்படிக் கேட்டால் பதில் சொல்வதற்கு விட்டேனா பார் என்று வரிந்து கட்டிக்கொண்டு மேற்படி பத்திரிகை ஆசிரியர்கள் முன்வருவார்கள். ஆனால் இங்கு தினசரிகள் இருக்கும்போது தமிழகத்துத் தினசரிகள் தேவையில்லை என்ற கருத்துக்கு இந்தத் தினசரிகள் சிலதும் வக்காலத்து வாங்குவதுதான் வேடிக்கையாகவிருக்கிறது.

தமிழ்நாட்டுத் தினசரிகளைப் படிப்பவர்கள் ஏதோ ஒரு தினசரியைத்தான் படிக்கவேண்டும் என்று படிப்பதில்லை. தமிழ்நாட்டுச்செய்திகளை உடனுக்குடன் விரிவாக அறியவே அவைகளை நாடுகிறார்கள். அதனால் அவர்கள் இங்குள்ள தினசரிகளைப் படிப்பதில்லை என்பதும் புறக்கணிக்கிறார்கள் என்பதும் தவறான வாதமாகும்!

அப்படியானால் இங்குள்ள ஆங்கிலத்தினசரிகள் போதியளவு இருக்கக்கூடியதாக வெளிநாட்டு ஆங்கில தினசரிகள் வருகின்றனவே! அது எந்த அடிப்படையில்?

'இங்கு தேவையான சஞ்சிகைகள் தோன்றியதும் கட்டுப்படுத்தப்பட்டு தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் சஞ்சிகைகவகூட பின்னர் தடை செய்யப்படுமாம்.'

அரசாங்கத்தின் இந்த முடிவால் இங்குள்ள பலர் 'ஈழத்துச் சஞ்சிகைகளை வளரவிடக்கூடாது. வளர்ந்தால் அதை சாட்டாக வைத்து தமிழ்நாட்டு சஞ்சிகைகளைத் தடைசெய்து விடுவார்கள். அப்படித்தான் முன்பும் இங்குள்ள தினசரிகளை ஆதரிக்கப்போய் நடந்தது' என்ற முடிவுக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. (அதற்காக தமிழகத்துச் சஞ்சிகைகளை இப்பொழுதே முற்றாகத் தடைசெய்து விட்டால் என்ன என்ற அசட்டுத்தனமான முடிவுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் வந்துவிடக்கூடாது என்றும் இறைவனை இறைஞ்சுவோமாக!)

தமிழ் நாட்டுத் தினசரிகளைத் தடைசெய்வதையும், சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்துவதையும் வரவேற்கும்—வாழ்த்தும் தமிழர்கள் யார் தெரியுமா?

இங்குள்ள தமிழ் வாசகர்கள் கேட்டார்களா அப்படிச் செய்யுமாறு? அவர்கள் விரும்பாதுவிட்டால் அந்தத் தினசரிகளும் சஞ்சிகைகளும் இங்கு இத்தனை செல்வாக்குப் பெற்றிருக்கவே முடியாதே!

இங்குள்ள தமிழ் எழுத்தாளர்கள் அப்படிக் கேட்டார்

(10-ம் பக்கம் பார்க்க)

---

# தென்னிந்திய தமிழ் ஏடுகள் ஈழத்து எழுத்தாளர்களை மதிப்பதில்லையா?

தென் இந்திய ஏடுகள் ஈழத்து எழுத்தாளர்களை மதிப்பதில்லை என்பது தமிழக ஏடுகளை தடைசெய்ய வேண்டும் என்று கூறுவோரது ஒரு வாதம். இக் கூற்று, பொருந்தாப் பொய்யுரை என்பதை ஏதுக்கள் கொண்டு எடுத்து இயம்ப விரும்புகிறேன் செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, கல்கி, கலைமகள், கலைக்கதிர், ஆனந்தவிடகன், அமுதசுரபி, மஞ்சரி, எழுத்து, தாமரை, தீபம் ஆகியவற்றிலும் மற்றும் தென்னகத்திலுள்ள எத்தனையோ அஞ்சல்களின் ஆண்டு மலர்களிலும், சிறப்பு வெளியீடுகளிலும் ஈழத் தமிழ் அறிஞர்களின் படைப்புகள் வெளிவந்துள்ளன;

ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை சேர். பொன். இராமநாதன், சேர்; பொன்; அருணாசலம் காலம் தொட்டு விபுலானந்தர், நவநீதக் கிருஷ்ண பாரதியார், கணேசையர் தொடக்கம் இன்று வாழும் கா. பொ; இரத்தினம் புலவர் மணிப் பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதமணி கணபதிப் பிள்ளை, இராசதுரை, அருள் செல்லநாயகம், அம்பிகை பாகன் முத்துக்குமாரசுவாமி கா. இ. நடராசா, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, காசி ஆனந்தன் கணேசலிங்கம் கைலாசபதி, கரிகாலன் சிவத்தம்பி, வை. கா. சிவப்பிரகாசம், பாலேஸ்வரி, புதுமைப்பிரியை மற்றும் இக் கட்டுரையாளரின் கட்டுரைகள் உட்பட பல படைப்புகள் தமிழக ஏடுகளில் இடம் பெற்றுள்ளன. நெஞ்சுறுதியோடும் நேர்மைத் திறத்தோடும் இவ்வுண்மையை எவரும் மறுக்க முடியுமா என்று கேட்கிறேன்.

### கற்றோரை கற்றோர் காமுறுவர்

'கற்றோரைக் கற்றோர் காமுறுவர்' கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற கூற்றுக்களுக்கமைய தகைமை பெற்ற கட்டுரைகள் கவிதைகள் கதைகள் தமிழக ஏடுகளில் இடம் பெற்றே உள்ளன. தம்மில் நம்பிக்கை இல்லாத தமிழ் எழுத்தாளர் பற்றி நான்

**ஈழவேந்தன்**

கூறுவதிற்கில்லை கண்ணிருந்தும் குருடராய் செவியிருந்தும் செவிடராய் வாழ விரும்புவோர் என் இரக்கத்திற்கு என்றும் உரியவர்கள். உண்மையில் தூங்குபவரை எழுப்புதல் எளிது ஆனால் தூங்குபவர்போல பாவனை செய்பவர்களை எம்மால் எழுப்பவே முடியாது.

### ஆறுமுகத்தை நாவலராக்கியது எந்த நாடு?

அடுத்து எழுப்பப்படும் குற்றச்சாட்டு ஈழத் தமிழ் அறிஞர்களை தாயகத் தமிழ் அறிஞர் மதிப்பதில்லை என்பதாகும். இது வடிகட்டிய பொய்ப்புரையாகும். நாவலரின் பல்துறை சமய மொழி இலக்கியப் பணிக்கு உதவிய தமிழர் யார்? சாதாரண ஆறுமுகத்திற்கு நாவலர் பட்டம் சூட்டி ஆறுமுகநாவலர் ஆக்கியது எந்த நாட்டு ஆதீனம் நாவலரின் விவிலிய நூலின் மொழி பெயர்ப்பே தலை சிறந்த மொழி பெயர்பு என்று தீர்ப்பளித்த தமிழ் அறிஞர் எந்த நாட்டு தமிழ் அறிஞர்? தமிழகம் ஈழத்திற்கு என்றும் கடப்பாடுடையதாக விளங்கும் அளவிற்கு நாவலரின் பணி சிறந்து விளங்குகிறது என்று நாவலர் சோமசுந்தர பாரதியார் வாழ்த்தினரே! அவர் எந்நாட்டுத் தமிழ் அறிஞர்? தென் புலோலியூர் கதிரவேற்பிள்ளை அவர்களை தன் ஆசான் என்றுவாழ்த்தினரே திரு. வி. க. இந்தத் திரு. வி. க. எந் நாட்டவர்?

### தலைமைதாங்க அழைத்தது தமிழகம்

மற்றும் தாமோதரம் பிள்ளை, கனகசபைப்பிள்ளை திருமலை கனகசுந்தரம்பிள்ளை தென்ஸ்மண் விசுவநாத பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்களின் பல் துறைப்பணிக்கு ஊக்கமும் ஆர்வமும் அளித்த நாடு எந்த நாடு? தமிழ் நாடு அல்லவா?

சேர்: பொன். இராமநாதனை, சேர். பொன். அருணாசலத்தை, வட்டுக்கோட்டை வழக்கறிஞர் நாகலிங்கத்தை சேர். கந்தையா வைத்தியநாதனை தாயக சைவ சித்தாந்த சமாசம் அழைத்து தம் விழாக்களில் தலைமை வகிக்கச் செய்து பெருமை அளித்ததில்லையா? அண்மையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் [illegible] விழாவில் தாமோதரம் பிள்ளை அவர்களின் படத்தை திரை நீக்கம் செய்து அவரின் பணியைப் பாராட்டவில்லையா? சிறப்புச் சொற்பொழிவாளராக ஈழத்து திருமதி. இரத்தினம் நவரத்தினத்தை அழைத்துச் சிறப்பித்ததை இவ்வளவு விரைவில் யாம் மறப்பதா?

### விபுலானந்த அடிகளை வியந்துபோற்றியது

விபுலானந்த அடிகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அல்லவா முதலில் அழைத்து தமிழ்ப் பேராசிரியர் பதவியை அளித்ததை அறிவுடைய மகன் எவன் மறக்க முடியும்? அடிகளின் யாழ் நூல் அரங்கேற்றத்தை மிகச் சிறப்பாக நடாத்தியது கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்பதை யாம் எளிதில் மறக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரசூரியரின் குருட்டு அடிமைப்புத்திக்கு விடிவே இல்லையா? நாவலர்சிலையின் நாவசையாதென்ற தைரியமா? அல்லது தமிழ்பேசும் மக்கள் உணர்ச்சியற்ற பிண்டங்களென்றமமதையா?

29.10.71ல் நாவலர், ஆனந்தக் குமாரசாமி ஆகியோரின் முத்திரை வெளியீட்டு விழாவில் எதிர்பார்த்தது நடந்துவிட்டது; தமிழும் சைவமும் நீடுழி வாழ வேண்டுமென்று போராடி வெற்றிகண்ட நாவலர் முத்திரை வெளியீட்டு விழாவில் குமாரசூரியர் சிங்களத்தில் பேசி விழாவைத் தொடக்கி வைத்தார். சிங்கள எஜமானர்களை திருப்திப்படுத்துவதற்கு சுதந்திரச் சிங்கம் ஆறுமுகநாவலர் ஐயா அவர்களின் முத்திரை வெளியீட்டு விழாவை பயன்படுத்தியது அவமானம், வெட்கம், துரோகம்.

31.10.71 வெளியீடான 'சுதந்திரன்' பத்திரிகையில் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி உயர்திரு கா. பொ. இரத்தினம் அவர்கள் நாவலர்சபை அமைப்பாளர்களில் ஒருவரான திரு. ம. ஸ்ரீகாந்தாவுக்கு எழுதிய கடிதம் எவ்வளவு தீர்க்கதரிசனமானது என்பதை அறியும்போது மந்திரி குமாரசூரியரின் அடிமைத்தனம் எவ்வளவு தூரம் நாடறிந்தது என்பதை மக்கள் நன்கறிவார்கள்.

முத்திரை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டவர்களில் குமாரசூரியரைத் தவிர 'சிமோல்' அருளம்பலம், துரையப்பா ஆகியோர்களினதும் சுதந்திரத் தாகத்தை நாடறிந்ததே. இத்துரோகிகள் நாவலர் சிலை பேசாது என்பதை நன்கறிவார்கள். ஆனால் தமிழ்ப் பேசும் மக்கள் உணர்ச்சி என்றும் 'சிலை'யாக இருக்கப் போவதில்லை என்பதை வெகு விரைவில் இவர்கள் அறியத்தான் போகிறார்கள். இச்சமயத்தில் 23.10.71ந் திகதி 'சுதந்திரன்' ஆசிரியர் எண்ணம் படித்தோர் நாவலர் ஐயாவின் சிலை எப்படிச் சபித்திருக்குமென்பதை மிக அழகாக எடுத்துக்காட்டியதை அறிவார்கள். ஆசிரியரின் ஆற்றலையும் பாராட்டியிருப்பார்கள்.

நாவலர் ஐயா, கலாயோகி ஆனந்தக்குமாரசாமி, சுவாமி விபுலானந்தர் மற்றும் முஸ்லிம் பெரியார்களுக்கு முத்திரைகள் வெளியிடப்படவேண்டுமென்பதில் தமிழ்ப்பேசும் மக்களிடத்தில் வேற்றுமை இல்லை. ஆனால் யாரால், எப்பொழுது, எந்த ஆட்சியில் வெளியிடப்படவேண்டுமென்பதிற்றான் தர்க்கம்.

நமது மொழி, இனம், மண், தொழில் ஆகிய ஜீவாதார உரிமைகளை நசித்து ஒழிக்க முற்படுகின்ற அரசாங்கத்தின் அடிமை அமைச்சர், நல்லூர் நயவஞ்சகப்பா பிரதிநிதி, ஸ்ரீ.ல.சு. கட்சியின் யாழ் கிளைத் தலைவர் துரையப்பா போன்றோர் நாவலர் ஐயாவின் நினைவு முத்திரை விழாவில் பங்குபற்றிப் பிதற்றினார்களென்றறியும்போது உண்மைத் தமிழர்களாக வாழ்வோர்களின் நெஞ்சங்களெல்லாம் வேதனையால் துடிக்கின்றன.

தங்கள் துரோகத்தை மறைக்க இத்துரோகக்கும்பல் முத்திரை வெளியீட்டு விழா நாடகத்தில் தங்களைக் கதாநாயகனுக்கப் பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரத்தின் வில்லன்களாகவே இவர்களைக் கருதுகின்றார்கள் என்று இவ்விடத்தில் அழுத்தம் திருத்தமாக கூறிவைக்கவேண்டும்.

நெடுநாளைய கனவு ஒன்று நினைவாகிவிட்டதென குமாரசூரியர் பெருமைப்படுவதாக தெரிகிறது. பாவம் தமிழ்ப் பேசும் மக்களின் உணர்ச்சியை சரியாக எடைபோடத் தெரியாததனுல் மந்திரி தடுமாறுகின்றார்; உண்மையில் இவ்வரசாங்கத்திற்கு தமிழ்ப் பேசும் மக்களின் சுதந்திரமான அரசியல் வாழ்வில் அக்கறையிருந்திருந்தால் குறைந்தபட்ச தமிழரசு—தமிழ்க் காங்கிரசின் கூட்டு திருத்தப் பிரேரணையை புது அரசியல் சட்டத்தில் சேர்த்திருக்கும்.

இந்நாட்டை பௌத்த சிங்கள நாடாக்க முயற்சித்துக்கொண்டிருக்கும் இந்த அநியாய அரசு, நியாயமானதைச் செய்யுமென தமிழ்ப் பேசும் மக்கள் எண்ணியிருந்தால், அப்படி எண்ணுகின்றவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றியவர்களாவர்; எப்பக்கம் திரும்பினும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இந்த அரசாங்கம் தொல்லைகள் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. இப்படியான இக்கட்டான நிலையில் குமாரசூரியர் அருளம்பலம், துரோகப்பா, தியாக(மில்லாத) ராசா, வி. பொன்னம்பலம், ஆனந்தசங்கரி கும்பல் ஏதோ தமிழ்ப்பேசும் மக்களுக்காகச் சாதனை செய்கிறோமென்பதெல்லாம் வெறும் புலுடா.

எம். சி. சுப்பிரமணியம் நாவலர் முத்திரை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு தூரநின்றார். எப்படி அவர் கலப்பார்? அவர் அடிவருடிகள்தானே யாழ்ப்பாண மதில்களில் —'சாதி வெறியன் நாவலனுக்கு சிலையா? நாவலன் சிலையை உடைப்போம்'' என எழுதியுள்ளார்களே? துரோகக் கும்பல் ஒழியும்நாள் வெகு தூரத்திலில்லை.

—மகாமந்தி(ரி).

யாழ்ப்பாணம்.

★

## மக்கள் குரல்

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு:—

தந்தையின் வாழ்க்கைக் குறிப்பினை வெளியிட தடைபோட்டுத்தன் ''தரம்'' காட்டி இருக்கின்ற இந்தத் தரங்கெட்டுப்போன தமிழ் இனத்தின் திடீர் காவல் அமைச்சரின் கெடுபிடிகள்—பித்தலாட்டமான பேச்சுக்கள் ஒவ்வொன்றும் இந்த அரைக்கிறுக்கின் கையாலாகாத்தனத்தை அப்படியே படம் பிடித்துக்கொடுக்கின்றன—எமக்கு.

தந்தையின் புனிதமான—''வாழ்க்கை காவியத்தை'' தாங்கி வரும் பாக்கியம் இலங்கையிலிருந்து வெளியாகும் இதழ்களுக்கு—''சுதந்திரன்'' ஒன்றைத் தவிர்த்து வேறு எந்தக்கேவலமான இதழுக்கும்—தினசரிக்கும் கிடையாதென்பதனை இந்தக் கேவலமான—கொழும்பு மாநகரின் கேவலமான பத்திரிகை ஸ்தாபனமும்—இந்தத்தரம் கெட்ட அமைச்சரும் நன்கு அறிந்து கொள்ளட்டும்.

ஆனால் தன்மானமிக்க—தமிழ் உணர்ச்சி நிறைந்த தமிழ் மக்கள் இனிமேல்

(10-ம் பக்கம் பார்க்க)

## திருவாளர் குயுக்தியார்

திருவாளர் குயுக்தியார் வெளியூர் சென்றிருப்பதால் அவரது பதில்கள் இவ்வாரம் இடம் பெறவில்லை. அடுத்த வாரம் வழமை போல இடம்பெறும்

—ஆர்

# மாவட்ட அடிப்படைத்தேர்வும் தமிழரசுக்கட்சியின் நிலையும்!

சுதந்திரன் ஆசிரியருக்கு,

கடந்த இ. த. அ. கட்சியின் செங்கலடி செயற்குழுக் கூட்டத்தில் மீன்பாடும் தேன்நாட்டு முதல்வரும் தலைவரும் பேசியது மிகவும் மன வருத்தத்தைக் கொடுக்கின்றது. மாவட்டரீதியில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதை ஆதரித்தும் திறமை முறையில் (போட்டிப் பரீட்சை மூலம்) அனுமதிப்பதை எதிர்த்தும் அவர்கள் பேசியிருக்கின்றார்கள், அதற்கு அவர்கள் கூறும் காரணம் மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து கூடிய தொகையான மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதாகும்.

ஒருவேளை இப்போது தெரிவு செய்யப்படுவதிலும் பார்க்கக் கூடுதலானவர்கள் அப்பகுதியில் இருந்து மாவட்டரீதி அமுலானல் தெரிவு செய்யப்படலாம். ஆனல் அவர்கள் தமிழ்ச் சமுதாயம் முழுவதும் முன்னேற்றத்திலிருந்து தள்ளப்படுவதைக் கவனிக்கவில்லை. சென்ற முறை நூற்றுக்கு மேற்பட்டவர்கள் (தமிழர்) போட்டிப் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனல் மாவட்டரீதியில் தெரிவு செய்யப்பட்டால் தமிழர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் தெரிவு செய்யப்படுவார்கள்.

மாவட்டமுறையை எதிர்த்தால் அப்பகுதி மக்களின் எதிர்ப்பைக் கட்சி சம்பாதிக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் தானே அவ்வப்பகுதி மக்களுக்கு என்ன நிலையில் தமிழ் மாணவர்கள் இருக்கிறார்கள், ஆனபடியால் கட்சி இத்தகைய நடவடிக்கையை எடுக்கின்றது. நீங்கள் கூடிய எண்ணிக்கையில் தெரிவு செய்யப்படுவதற்கு முயற்சியுடையவர்களாக இருங்கள் என்று கூறிடல் வேண்டும். ஒருவேளை செயற்குழு மாவட்ட முறைக்கு எதிராக முடிவெடுத்தால் கட்சியை அப்பகுதி மக்கள் எதிர்ப்பின் இவர்கள் உரைகளே காரணமாக அமையலாம்.

மாணவர்கள் கூடுதலாகத் தெரிவு செய்வதற்குப் பாடசாலைகளின் எண்ணிக்கையைக் கூட்டுதல் வேண்டுமேயொழிய இப்படிச் செய்தல் தகாது. தமிழர்களின் உயர்ச்சியைத் தடுக்க சிங்கள ம(ா)க்கள் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைக்குத் தமிழ் ஆளர் இசைகின்றாரே! இப்படியான தெரிவு முறைக்குக் கட்சி இடம் கொடுக்க மாட்டாது என்பது திண்ணம்.

இப்படிக்கு,

இரா. வரன்,

[illegible]

[illegible]

ரம்ழான் கவிதைகள்:

## பிரார்த்தனை செய்திடுவோம்!

( மாறன் யூ. செயின் )

ஆண்டுக் கொருமுறை றமழான் மாதத்
தருள் மழை என்கின்ற—அந்த
ஆண்டவன் விதித்த நோன்பினை முஸ்லீம்
அனைவரும் போற்றிடுவோம்

☪

மாண்டவரி கொள்கை மரபினை எல்லாம்
மதங்களாய்க் கொள்ளாமல்—பாபம்
தாண்டிட மக்கள் வாழ்ந்திட இறைவன்
தஞ்சம் அடைந்திடுவோம்

☪

இம்மையில் நன்மை பன்மைகள் செய்து
இறைவனைத் தொழுவதுஏன்?—பல்லோர்
தம்மையே சொர்க்கத் தலமிடை சேர்க்குந்
தன்னலங் கருதியேதான்.

☪

சொர்க்கம் நரகம் என்றே மனதின்
சுருதியை மீட்டுவதால்—மனித
வர்க்கஞ் செழித்திடு மோஅருள் விளையும்
வழியினைத் தெரியாமல்

☪

வணங்கும் வழிகளில் ஒன்றே நோன்பெனும்
விரதமும், கடமைஅதுள்—என்றும்
இணங்கியே இன்பம் பெற்றிட வையகம்
இருந்திடல் தான்முறையே

☪

தன்னல இன்பம் கருதியே நோன்பின்
தரத்தினைக் குறையாமல்—அதனைப்
பன்னலங் கருதியே நோற்றிடல் வேண்டும்
பக்குவம், நெறிபரவ.

☪

நோயும் நொடியும் மிடியும் அகன்று
நெஞ்சம் புனிதமுற—எங்கள்
தேயும் வாழ்க்கை செழித்திட நோன்பைத்
தெளிவுடன் போற்றிடுவோம்

☪

எங்கள் இனமும் வளமும் தாமும்
இழிவாய்ப் போவதைநாம்—எண்ணிப்
பொங்கும் அருளாம் நோன்பினைப் பேணிப்
பிரார்த்தனை செய்திடுவோம்.

## இன்ப நிறை நோன்பே!

மனங்குளிர ஒலித்திடுதே
''மஃரி'' புக்காய் ''பாங்''கொலியும்;
சுணங்காமல் ''முஃமீன்''கள்
சூழ்ந்தொன்றாய்ப் பள்ளியிலே!
இணையில்லா இறையோனின்
இன்பநிறை நோன்பதனை...

☪

முறையாகத் திறந்திடவே
முழுமன தாய்க்கூடி; அவர்
இறையோனின் உணவருந்தி;
இறைஞ்சுகின்ற காட்சிதனை
பெரும் பேருய்க் காணவைத்த
பேறிறைக்கே புகழனைத்தும்!

☪

அடைகிடந்த ஊண் கதவு
அகன்று திறந்திட்டதனால்;
மடை கடந்த வெள்ளமென
வாய் திறந்து நோன்பாளி;
திடமனத்தில் ஒளிவீச
சீர்கனிந்த இறையானை
நிறை கண்ட இன்ப மதில்
நீந்தியுணவுண் பாரே!

☪

''சம்மாந்துறை அஸீஸ்''

மஃரிப்: மாலைத் தொழுகை நேரம்.
பாங்கொலி: தொழுகைக் களைப்பு விடுதல்.
முஃமீன்: இஸ்லாமியப் பற்றுள்ளவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது இலட்சியம்

## இனி எது?

இலங்கையில் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் சர்வாதிகாரரீதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் அமைப்பு சிறுபான்மை இனத்தவர்களைப் பெரும்பான்மை இனத்தவர்கள் நசுக்குவதற்கும், தமிழினத்தை இனமாற்றம் செய்வதற்கும், அடிமைப்படுத்துவதற்கும் ஆக்கப்பட்டிருக்கும் சதித்திட்டம்.

ஜனநாயக சோஷலிசம் என்றும் சமத்துவ அரசுரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு எனத் தமிழ் மக்களிடம் பொய்ப் பிரச்சாரம் புரிந்திடும் ஐக்கிய முன்னணி அரசாங்கம் சிங்கள மக்களுக்கு உண்மையுடன் நடந்து கொள்கிறது.

தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கும் அடிப்படையான அரசியல் அமைப்புத் திட்டத்தில் எவ்விதமான இடமும் இல்லை. அத்திவாரமே சரிந்து விட்ட பின் அதன் மீது கட்டடம் எழுப்பிப் பயன் ஏது?

### பச்சைத் துரோகம்

அடிப்படையான உரிமைகள் அரசிலமைப்புத் திட்டத்தில் தமிழ் மக்களுக்கு இல்லை. எதிர்காலத்தில் தமிழர்கள் என்று ஒரு இனம் இந்த நாட்டில் பூர்வீக குடிகளென்றிருக்கவில்லை எனப் பொய் நூல்கள் வெளிவரலாம். தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய துரோகத்தைச் செய்ததுமல்லாமல், தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்போம் என்று ஐக்கிய முன்னணிக்கட்சிகள் இடத்திற்கு இடம் நடிப்பதில் தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கின்றனர்.

### மா—மாக்கள்

தமிழ் மக்களின் கவனத்தை மாற்றுவதற்காகத் தமிழ்விழா, கலைவிழா என ஐக்கிய முன்னணிக் கட்சிகள் போலிநாடகம் போட்டு வருகின்றன. இதற்குக் கைக்கூலித் துரோகியர்களாகி நிற்கும் ஒரு சில போக்கற்ற பொம்மைகள் தமிழர் எனத் தம்மை அழைத்துக் கொண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அரசியல் 'மாமா' வாகியுள்ளனர். ஆமாம் இந்த 'மாமா' க்கள் (மாக்கள்) (டேப்ரிக்காடர்) ஒலிப் பதிவு நாடா போன்றவர்கள். தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலே இந்த மாமா நாடாக்களின் குரல் ஒலிக்கப்படும். அல்லது ஒரு சில கைக்கூலித்தின ஏடுகள் இந்தக் குரலை எடுத்துரைக்கும். இந்த மாமாக்கள் சொல்லி வருவது என்ன!

'தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ்வதற்கு ஐக்கிய முன்னணி அரசாங்கம் உதவி செய்கிறது, உதவி செய்யும். ஆகவே இந்த அரசாங்கத்தை ஆதரித்துத் தமிழர்கள் முன்னேற வேண்டும்' என்பதுதான்.

தமிழர்களை ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டது. இன்று வாழும் தமிழன் ஏமாப்புக்கு ஆமாப்பா போடமாட்டான். காட்டிக் கொடுக்கும் கயவர்களுக்கு கால் வருடி வாழமாட்டான். பாட்டிக் கதை பேசிய காலம் பறந்தோடி விட்டது என்பான். தமிழினத்தை ஒழித்துவிட எழும் இறுமாப்பும், ஆணவமும் ஒழிவதற்கு உயிர்த்தியாகமும் செய்யத் தயங்கான். புல்லுருவிகளாகிப் புறம் பேசித் தமிழினத்தைத் தாழ்த்திடத் துணை செய்திடும் துரோகச் சண்டாளரைத் தொலைத்திடுவான்.

ஆமாம் ... தமிழ்ப் பேசும் ஒவ்வொரு தமிழ் மகனும், தனது இனத்தின் பெருமையைக் கட்டிக்காப்பதில் இம்மியும் பிறழான். இது சத்தியம்.

### பூர்வீகத் தமிழ்நாடு

இலங்கை நாடு தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் சொந்த நாடு. பூர்வீக வரலாற்றின்படி இலங்கை திராவிடர் (தென்னவர்) தேசம். ஏறத்தாழ, கி. மு. 3000 ஆண்டுகளில் தான் இந்தியாவிலிருந்து இந்த நாடு பிரிந்தது. அந்தக் காலத்தில் இந்த நாட்டில் வாழ்ந்தவர்கள் யார்? சிங்களவர்களா?

தமிழ்ப் பேசும் மக்களே, சற்றே சிந்தியுங்கள். தமிழ் மக்களை வந்தேறு குடிகளெனக் கூறும் வாய்நாற்றப் பேச்சுக்கு பாய்விரித்திடும் துரோகிகள் இன்று தமிழ் மக்களின் அடிப்படையான உரிமைகள் அரசியலமைப்புத் திட்டத்திலே இடம் பெறாதவாறு ஒப்புதல் அளித்துள்ளனர் என்றால் இந்தக் கயவர்களை, விழிகண் குருடர்களை இன்னுமா உங்கள் பிரதிநிதிகளாகமதிக்கின்றீர்கள். அற்ப சலுகைகளை வாங்கித்தருவதாக உங்களை ஏமாற்றி அடிமைத்தனத்திற்குள் அழைத்துப்போகச் சதிசெய்யும் இந்தச் சண்டாளர்களைப் புறக்கணித்துப் புதுவாழ்வு காணப் புறப்படுங்கள்.

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தகாலத்தில் அதில் வாழ்ந்தவர்கள் தமிழர்களே. இவர்கள் தலைசிறந்த அறிவாற்றலுடையவர்களாக இருந்தனர். விஞ்ஞான அறிவுடையோராகவும் விளங்கினர். இயக்கர், நாகர் என இவர்களின் குலப்பெயர்களால் அழைக்கப்பட்டனர். இவர்களின் மொழி தமிழ். இவர்களின் பாரம்பரியத்தை மூடி மறைக்கின்றனர் சிங்கள சரித்திர ஆய்வினர். தமிழரின் பூர்வீக உரிமைகளை இல்லாது செய்துவிடலாமென்ற மூடமதியில் விளையும் எண்ணங்களுக்கு இவர்களும், இவர்கள் அரசும், சிங்கள ஏகாதிபத்திய ஐக்கியமுன்னணிக்கட்சிகளும் கூறும் சொல் 'முற்போக்கு' இதற்குத் தாளம்போடும் பேடியர்கள் தமிழினத் துரோகிகள்.

விஜயன் கி. மு. 486ல் இலங்கைக்கு வந்தான். இற்றைக்கு 2457 ஆண்டுகளுக்கு முன் இவன் வருகை நிகழ்ந்தது. விஜயன் பாண்டியன் மகளை மணந்துகொண்டதும் தமிழர்கள் இரு தேசங்களுக்கும் சென்று வந்ததும் கற்பனைக் கதைகளல்ல. அப்போது பௌத்தமும் இலங்கை வந்தடையவில்லை. சிங்கள இனமென ஓர் இனம் உருவாகியிருந்திடவில்லை.

சிங்கள மக்கள் இந்த நாட்டின் பூர்வக்குடிகளாக இருந்திடவில்லை என்பதைச் சரித்திரச் சான்றுகள் தெளிவாக்குவன. ஆகவே தமிழ் மக்களின் பூர்வீகத் தேட்டமாகும் இலங்கையை இடையில் உருப்பெற்ற சிங்கள மக்களுக்கு மட்டும் சொந்தமென இன்றைய ஐக்கிய முன்னணி சிங்கள அரசு சொல்லிவருகிறதென்றால் இதைவிடவேறு சான்று எதற்கு. இந்த அரசு தமிழின ஒழிப்பை நடாத்தத் திட்டமிட்டு வருகிறது என்பதை உறுதிப்படுத்திட.

தமிழ்ப் பேசும் மக்களனைவரும் ஒன்றுபட்டு தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கும் இலட்சியத்தை மேற்கொள்ள வேண்டியதே தனிப்பெரும் பொறுப்பு.

இந்தப் பொறுப்பினை உணர்ந்து, தமிழ் மொழியை அரச மொழிகளில் ஒன்றாக ஆக்குவதில் ஒவ்வொரு தமிழ் மகனும் துணிந்து பணியாற்றினால் நிச்சயம் நமது தமிழினம் வெற்றி பெறும். தமிழ்த்தாய் மகிழ்வாள். ஆகவே தமிழ்ப் பேசும் சகோதர சகோதரிகளே, துரோகிகளின் மாயப் [illegible] [illegible] இனத்தையும் தமிழ்ப் பூமியையும் காத்திடத் துணைவு கொள்ளுங்கள். காந்தி மகான் நமக்குக் காட்டியுள்ள 'ஒத்துழையாமை' எனும் பலம் மிகுந்த ஆயுதம் நம்மிடமிருக்கும்போது சோர்வடைவானேன்? தமிழினம் முழுவதுமே ஒருமை மனத்துடன் இந்த இலட்சியத்தைத் தொடர வேண்டும்.

இந்த இலட்சியத்தை கட்சிக் கொள்கைகளின் அடிப்படையிலோ, அல்லது இயக்க அடிப்படையிலோ தொடங்காமல் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் மொழி, இனம், நாடு, உரிமை என்ற அடிப்படை நினைவுடன் செயல்படுத்தி நமது இனப் பெருமைக்கும் வெற்றி வாழ்வுக்கும் வழியமைத்திட வேண்டும். ஒவ்வொரு தமிழனும் தனித்தலைவனாக தன்னை மதித்து இந்த இலட்சியத்தை மேற்கொள்ள வேண்டும். இதுவே நமது இலட்சிய வெற்றிக்கு அடிகோலும். தமிழ் மக்களின்

கவிஞர்

**சக்தி பாலையா**

எதிர்கால வெற்றிக்கும் இது வே/சாலச்சிறந்த ஒளிவிளக்கு என்பேன்.

உரிமைப் பிச்சை கேட்பது உயிரில்லாச் சவத்துக்கு உயிர் கேட்பது போலாம். சலுகைகள் தமிழினத்துக்குத் தேவையில்லை. சம உரிமையே தேவை. அந்த உரிமையை அடையும் வரையில் நம் இலட்சியப்பாதையை விட்டு விலகோம் என உறுதி கொள்வோம்.

இலங்கையில் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு நாட்டு மக்கள் அடிமைகளாக வாழவேண்டும் என்ற ஆசை இருக்குமானால் அந்த ஆசையை அழிக்கும் வரையில், அழிக்கும் வகையில் எமது இலட்சியம் செயலாக்கம் பெறல் வேண்டும்.

ஆட்சி ஆதிக்க ஆணவச் சட்டங்களைத்தான் இந்த இலட்சியத்தின் மூலம் எதிர்க்கும் வலிமையை நாமடையவேண்டுமல்லாது நாட்டு மக்களை எதிர்ப்பதெனக் கொள்வதற்கில்லை.

நமது எதிரி நமது உரிமையைப் பறிக்கும் அரசு. அந்த எதிரியை அடக்குவதுதான் நமது முதல் வேலை. அந்த வேலைக்கு ஆதாரம் ஒன்றேயொன்று அதுதான் ஒத்துழையாமை.

### நாம் என்ன செய்தல்வேண்டும்

தமிழ்மொழி பேசும் மக்களிடமும், சிங்களம் பேசும் மக்களிடமும் நமது தோழமை இம்மியும் குன்றாத வகையிலும் நமது தனிச் சுதந்திரம் பாதுகாக்கப்படும் வகையிலும் சமுதாய உயர்வு காண முயலவேண்டும். கூடுமான வரையில் சாதாரண சிங்கள மக்களை நமது சமுதாய கலை விழாக்களிலும், சமூகக் கொண்டாட்டங்களிலும் கலந்துகொள்ளச் செய்தல் வேண்டும்.

நமக்குள்ள அரசாங்கத் தொடர்புகள் அத்தனையும் தமிழ் மொழியிலேயே செய்து கொள்ளுதல் வேண்டும். எந்த விவகாரமாயிருப்பினும், அரசாங்கத் தொடர்புகுட்பட்டதானால் நேர்முகமாகவும், கடிதங்களிலும் தமிழில் தொடர்பு கொள்ளும் உறுதிவேண்டும்.

நமது பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்புடன் விளங்க வேண்டுமென எண்ணும் பெற்றோர், தமது பிள்ளைகள் தங்களின் இனத்தை விட்டுப் பிற இனத்துப் பெண்களையோ, ஆண்களையோ காதல் மணம் புரிந்து கொண்டு இனம் மாறிப் போகாதிருக்கத் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்க் கல்வியுடனும் தமிழ்ப் பண்பாட்டுடனும் வளர்ப்பதில் தீவிரம் காட்டிடுதல் முக்கியமாகும்.

சிங்களம் படித்துவிட்டால் உத்தியோகம் கிட்டிவிடுமே என்று நினைக்கும் தாய் தந்தையர், தங்கள் பிள்ளைகளினதும், தங்களினதும், எதிர்காலத்தின் இன்னல்களை உணராதவர்களாகியுள்ளனர். ஒரு சில போலிச் சலுகைகளுக்காக மாய வேடமிடும் ஒரு சில அரசியல் வாதிகளின் கபடக் கருத்துக்களை மெய் என நம்பிச் சிங்கள மொழியில் தமது பிள்ளைகளுக்குக் கல்வியூட்ட எண்ணிடும் தாய் தந்தையர், எதிர்காலத்தில், தங்கள் பிள்ளைகள் சிங்கள இனத்திலே மண வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்ள முயலுவதைத் தடுத்திட முடியாது.

சிங்கள மொழியில் படித்த ஒரு தமிழ்ப் பெண் தமிழறிவு இல்லாதவளாய், சிங்கள வாலிபனையே மணக்க நேரிடுமானால் அந்தத் தம்பதிகளின் பிள்ளைகள்சிங்களவராக மாறிவிடுவதில் ஆச்சரியமில்லை.

அதுபோல, ஒரு தமிழ்ப் பிள்ளை சிங்களத்தில் கல்வி கற்று தமிழ் வாலிபனையே மணக்க நேரிட்டாலும், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைக்குத் தாய் பயிலற மொழியில்தான் தாலாட்டு முதல் ஏனைய வளர்ச்சியும் ஊட்டப்படும். அதனால் அந்தக் குழந்தையும் சிங்கள இனத்தில் கலந்திடுவதைத் தடுத்திடல் அரிது.

ஆகவே, தமிழ்ப் பண்பாடும், தமிழ் மொழியும், தமிழினமும், தன்மானத்துடன் தனித்துவம் குன்றாது சரிநிகர் சமானமாக சிங்கள இனத்துடன் வாழ்வதற்குத் தமிழ்க் கல்வியே மிகமிக அத்தியாவசியமாகும்.

இதனைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் கட்சிசார்பிலோ, அரசியல் கொள்கைகளின் சார்பிலோ, சமுதாய உயர்வு தாழ்வு பேதக் கொள்கைகளின் சார்பிலோ ஒட்டி நின்று பல்வேறு கருத்து வேறுபாடுகளில் மதிமயங்கித் தடுமாறாமல், தத்தம் தனிப்பெருங் கொள்கையாமென உறுதியுடன் தமிழ் மொழிமைத் தாய் மொழி என மதித்து வாழவேண்டும். தமிழிலே சகல அறிவையும் பெற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தமிழனும் இந்த நம்பிக்கையுடன் செயலாற்றுவானேயானால் அதுவே ஒரு பெரிய இயக்கமாக எழுச்சிபெறும். அந்த இயக்கமே தமிழரின் எதிர்

(11-ம் பக்கம் பார்க்க)

## நல்ல விடை தருவீர்!

தீனுக்குலகமெலாம் தேடி அருந்தியபின்
வானில் உலவிவரும் வண்ணப்பருந்துகளே!
நானொன்று கேட்டிடுவேன் நல்ல விடை தருவீர்!
ஏனித்தமிழருக்கு இந்நிலைமை, சொல்லிடுவீர்?

அடிமைத்தனத்திற்கே ஆட்பட்டிருக்காமல்
விடுதலையை வேண்டியன்றோ விண்ணிற்பறக்கின்றீர்?
படிப்பு மிகுதியினால் பண்பிழந்த நந்தமிழர்
கெடுதல் புரிவதுமேன்? கீழ் நோக்கிச் செல்வதுமேன்?

எங்களுக்குள்ளே இருக்கின்ற சாதிகள்போல்
உங்களுக்குள்ளேயும் உண்டாமோ, சொல்லிடுவீர்?
எங்கெங்கோ சென்றிருப்பீர், இந்தத் தமிழரைப்போல்
அங்கெல்லாம் உள்ளோரும் அடிபணிந்து வாழ்பவரோ?

கூட்டாயப் பறந்தே குலவுகிறீர், எம்மைப்போல்
காட்டிக்கொடுக்கும் கலைதனிலும் வல்லீரோ?
ஏட்டுப்படிப்பிருந்தால் எம்புத்தி தான் உமையும்
ஆட்டி அலைத்திருக்கும்? அதிலிருந்து தப்பிவிட்டீர்!

(வேறு)

ஆடலும் கண்டோம், காற்றில் அழகுறப்பறக்கும்போதே
பாடலும் கேட்டோம்! ஆனால், பலமதம் தேடி எம்போல்
ஓடலும் உண்டோ? நாட்டில் ஒற்றுமை சிதறித்தேய்ந்து
வாடலும் உண்டோ? கட்சி வளாப்பதும உண்டோ
சொல்வீர்?

நோய்க்கிடம் தருவதுண்டோ? நோயது பிடித்த பின்னர்
பேய்பிடித்தாட்டலுண்டோ? பெரும்பணம்
குவிப்பதுண்டோ?
ஒய்விலாதுழைத்துழைத்தே உறிஞ்சிடும் மதுவில் நாளும்
தோய்வதுமுண்டோ? உண்மை துலங்கிடச்சொல்லுவீரே!

காத்திருந்தெதற்கும் எங்கும் காரணம் எதுவுமின்றி
சாத்திரம் பார்த்துப் பார்த்தே தவறுகள் புரிவதுண்டோ?
ஆத்திரமின்றி நன்கு அலசியும் மூடக்கொள்கை
மாத்திரம்விடாத புத்திமந்தமும் உண்டோ சொல்வீர்!

ஊரிபல பார்த்திருப்பீர், உண்மையைச் சொல்வீர்,
முன்னம்
பார்டல கட்டியாண்ட பழம்பெரும் தமிழர் இந்நாள்
சீர்எலாம் கொண்டு நல்ல சிறப்புடன் வாழுவாரோ?
வேர் அற வீழுவாரோ? விடைதர வேண்டுகின்றேன்!

—தாமரைத் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழா!

**கண்டி—துரை**

இங்கிருப்போர் தமிழ் நாட்டைப் பின்பற்றிவிடுவாரோ என்று ஏங்கி, சமதர்மக் குதர்க்கவாதிகள் தடை போடுகின்றனர் தமிழ் நாட்டுத் தமிழர் ஏடுகளுக்கு மட்டும்! அசல் தமிழர் ஏடுகள் வேண்டாமே, அந்நியர் எழுதும் தமிழ் ஏடுகளே ஏற்றம் பெறவேண்டும் என்றன்றோ இரைகின்றார்.

ஈழத்தில் இருக்கின்ற ஈழத்து (சமதர்ம) எழுத்தாளர் ஈழத்தமிழரின் இழவு அன்றோ எழுத உள்ளார்! இவரை நம்பி நாம் தமிழ் நாட்டு ஏடுகளை இழந்து இருப்போமோ?

ஏற்பாரா எடுபிடிகளின் ஏமாற்று எண்ணங்களை ஈழத்து இளந்தமிழ் வெள்ளம்? கூட்டங்கள் கூட்டுகிறார் குமாரசூரியர்கள், உதயசூரியர்க்கு எதிராக தமிழ் பேசத் தெரியாதோர் தமிழுக்குப் பேரம் பேசத் தலைப்பட்டிருப்பதைத் தமிழ் வாலிபர்கள் உணர வேண்டும். உணர்ந்திடின் விழிப்படைவீர். விழிப்படைந்தால் வீணர்களை விட்டுத்தான் வைப்பீரோ!

ஈழத்தமிழர்களை இற்றை வரை ஏமாற்றி, இன்னமும் ஏமாற்றி ஏப்பம்விட எண்ணுகின்றது எத்தர் கூட்டம். சோசலிசம் பேசிச் சோரம் வைத்து, சொந்த நலன்களுக்காய்ச் சோரஞ் செய்யும் சுயநலமிகளை நம்பினால் சோகமாய்முடியும் தமிழர் கதை. எனவே,

தமிழ் நாட்டில் அண்ணா குரல் கேட்டு விழிப்படைந்து வீர நடைபோடுந் தமிழரைப்போல், இங்கும் தந்தை செல்வா குரலுக்குச் செவி சாய்த்து விழித்தெழுவீர், விழித்திருப்பீர், அதுடன் நில்லாது மற்றையோரும் விழிக்கச் செய்வீர். இவ்வழியே செயற்படுவீர். ஏன்?

தமிழை, தமிழரை அழித்தொழிக்கச் சதிகள் பல திட்டமிட்டு நடத்துகின்றார்— அந்தோ கேளீர்!

பொருளாதாரப்போர் வையிலே தமிழ் ஈழ இடங்களெல்லாம் சிங்களக் குடியேற்றங்களாய் மாறுவது பாரீர்!

தேசிய ஒற்றுமைக்குச் சிங்களம் படித்திடுக என்று செந்தமிழர் தொண்டையிலே சிங்களம் புகுத்தப்படுவது காணீர்!

மாவட்ட அடிப்படையில் அரசாங்க அலுவலகட்கு ஆள் எடுக்கும் அவல நிலை கேளீர்!

துறைமுக அபிவிருத்தி கூறி சிங்கள மயமாகும் மாயா சாலந்தான் என்ன கண் துடைப்போ!

கல்வியிலும் கைவைத்தாச்சு. 1973ல் பல்கலைக்கழ

# விழித்திரு!

கத்துக்கு தரப்படுத்தல் மட்டுமன்றி மாவட்ட அடிப்படையில் ஆள் எடுப்பு நடந்திடுமாம். ஆறி இருப்பீரோ!

சோசலிசம் கூறிக்கொண்டு தனியார் துறைகளை அரசாங்க உடைமையாக்கி, அதன் பிறகு அத்துறையில் சிங்களத்தை ஆளவிடல் விந்தையன்றோ! முன் சொன்ன முறையிலெல்லாம் சோசலிசமுறையே தமிழுக்குப் பேராபத்து என்பதனை தமிழ் மக்கள் அறியவேண்டும், சிந்திக்க வேண்டும், செயற்படவும் வேண்டும். ஏன்?

இற்றைவரை தேசியமயமாக்கப்பட்ட துறைகளெல்லாம் வியாபார அல்லது வருவாய் கொடுக்கும் சேவைகளே. பஸ் சேவை, காப்புறுதி, கூட்டுறவுக் கடைகள், வங்கிகள் போன்றனவே. இன்னொருவிதமாகச் சொன்னால் அரசாங்கம் இத்துறைகளுக்கூடாக மக்களோடு வியாபாரஞ் செய்கின்றது. ஒரு வியாபாரி பொது மக்களோடு வியாபாரஞ் செய்வதானால் மக்களுடைய மொழியிற்றானே தொடர்பு கொள்ள வேண்டும்: ஆனால், இவ்வியாபாரத்துறைகளில் தமிழிலுஞ் செய்கிறார்களா? இல்லை. அங்கும் சிங்கள மயந்தான்.

'மிடுக்கன் சரக்கு இருக்க விலைப்படும்' என்பது போலல்லவா அரசு தமிழருக்கு வியாபாரஞ் செய்கிறது! எல்லாஞ் சிங்களம்—சதுசலா, லக்சலா, லங்காசம், சனசம்பத்த என்றெல்லாம் சிங்களப் பெயர்களில் கடைகளும், பொருட்களும் விலைப்படுகின்றன.

காப்புறுதிக் கூட்டுத்தாபனமும், வங்கிகளும் தமிழரின் பண முதலீட்டிலுந் தானே 'பிசினஸ்' நடத்துகின்றன: சோசலிச நிதி அமைச்சர் அண்மையிலே இலங்கை வங்கி சிங்களத்தில் பணியுரிய ஆணையிட்டால் அர்த்தமென்ன? பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் பெற்ற ஒருவர் 'பிசினஸ்' பண்ணும் சிறப்புப் பாரீர்! எம்முடைய பணத்தை எடுத்து வைத்து இலாபஞ் சேர்க்கும் வங்கிகூட சிங்களத்தைத் திணிப்பதென்றால் இதன் அர்த்தமென்ன? இப்படியான சோசலிசம் தமிழனுக்கேன்? சிங்களத் தலைவர்களுக்கு ஆலவட்டம் பிடிக்கும் சோசலிசத் தமிழ் வால்கள் தருவாரோ விளக்கம்!

அரசாங்க அலுவலகங்களில் வேலை பார்ப்போர் சிங்களம் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தப் படுகின்றனர். அதையாவது விளங்கிக் கொள்ளலாம். முதலாளி — தொழிலாளி தொடர்பு முறையில்;

ஆனால் பொது மக்களிடம் கை நீட்டிக் காசை வாங்கி 'பிசினஸ்' பண்ணும் இடங்களில் யார் முதலாவி, யார் தொழிலாளி? பணங் கொடுத்துதபுபவன் தானே முதலாவி! முதலாளியைப் பார்

# செயற்படு!

த்துத் தொழிலாவி என் மொழியில் நீ பேசு என்றால் பொருந்துமா? தன் 'வேலைக்கார' நிலையை அரசு உணருமா? பணங் கொடுத்துதவும் தமிழர்கள், தாமே முதலாளிகள் என்பதை உணர வேண்டும்: தம்மொழியில் தொடர்பு கொள்ளுமாறு உத்தரவும் இடவேண்டும் பணத்தையுங் கொடுத்து விட்டுப் பல்லிளிக்கவும் கூடாது.

வேற்றுமைகளை மறந்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பாடுபடவேண்டும் என்று கூறுகிறார்கள் சோசலிச அமைச்சர்களும் அவர்களது தமிழ்க் கையாட்களும். பொருளாதாரம் வளர்ந்தால் மொழிப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று ஏமாற்றுகிறார்கள் கோமாளிகள் — தமிழர்களை ஏமாளிகள் என்று எண்ணிக் கொண்டு!

'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்' என்ற முதுமொழிக்கமைய வடக்கிலே சோசலிசமும் தெற்கிலே சிங்களக்குரலும் எழுப்பும் இரட்டை நாக்குத் 'தோழர்கள்', தமிழையும் தமிழரையும் அழித்தொழிக்கப் புதுவழிகள் தேடுகிறார். மொழிப் பேச்சால் நாட்டைத் துண்டாடுகிறார் தமிழரசார் என்று சாடுகிறார், 'அத்தோழர்கள்' தமிழை அழித்தபின் தமிழர் இருப்பாரோ 'தோழர்களே' உங்கள் பொருளாதார வளங்காண?!

'இத்தோழர்களிடம்' கேட்கிறேன் ஒரு சின்னஞ்சிறு சங்கதியை! ஆம்; சின்ன வெங்காயச் சங்கதிதான்!

இந்தியருக்கெதிராகப் படை திரட்டும் அமைச்சரவர், இந்தியாவில் இருந்து வெண்காய இறக்குமதிக்குத்தடைபோட்டார். உள் நாட்டில் நிறைவு காண வெண்காய விலையை உயர்த்தினார். தமிழ்க் கமக்காரர் வெண்காயப் பயிர்ட்டில் ஈடுபட்டு வெண்காயம் விளைவித்தார். பொருளாதார வளர்ச்சிக்காக—ஆனால் தமிழனுக்குப் பெருலாபம் கிட்டத்தான் விடுவாரோ, அவர்தம் உயர்ச்சிகண்டு இருப்பாரோ!

குறைத்தனர் கட்டுப்பாட்டு விலையை! ஆனால் தெற்கேயும் பயிர் செய்யப்படுகிறதே உருளைக் கிழங்கு! இதற்குக் கட்டுப்பாட்டு விலை எங்கே போடட்டும் பார்க்கலாமே சோசலிச அரசு! இப்புறக் கணிப்பு நடவடிக்கைக்கு தமிழ் சோசலிச வீரர்களாவது தருவாரா பதில்? பின்பு ஏன் மொழி சிறிது வயிறு பெரிது என்று முழங்குகிறீர்?

மேலே சொன்னதோடு நின்று விட்டதே சின்ன வெங்காயச் சங்கதி! இல்லையே. அதுதான் கருவாட்டுச் சங்கதியிலும் பெரிய சங்கதியாச்சே!

யாழ்ப்பாண விவசாயிகள் கழகம் அமைத்து, வெண்காயத்தை ஒன்று சேர்த்து கூட்டுறவு மொத்த வியாபாரக்

# வென்றிடு!

கடைக்குக் கொடுப்பதாக ஒரு முடிவு, அதன்படி கழகமும் வெண்காயம் அனுப்பத்தான் செய்தது. ஆனால் கூ. மொ. வி. கடை விநியோக முறையில் கோட்டை விட்டதால் மேல் மாகாணத்தைத் தவிர்ந்த மற்ற மாகாணங்களில் வெண்காயத் தட்டுப்பாடு வந்தது. கூ. மொ. வி. கடைக்காரர்கள் யாழ்ப்பாண விவசாயிகள் வெங்காயத்தைப் பதுக்குகின்றனர் என்றார்கள். (பதுக்கிவைத்தல் வெண்காயம் அழுகிவிடும் அல்லது பாரம் குறைந்துவிடும். வெண்காயச் செய்கையாளர் மடையர்களா பதுக்க?) பின்னர் விவசாயிகள் கழகம் தம் பொறுப்பைச் சரிவரச் செய்யவில்லையென்று சாதிக்கிறது கூ. மொ. வி. கடை தமக்கே நேரில் விவசாயிகள் வெண்காயம் விற்க வேண்டுமாம்; ஏன் விவசாயிகள் ஒற்றுமையைத் தகர்க்கவா அல்லது அவர்களுக்கும் கொஞ்சம் சிங்களம் திணிக்கவா?

ஆம், சோசலிசம் சிங்களத் திணிப்புக்கு ஒரு திரை, கபட நாடகம்.

தனியார் துறைகளில் தமிழுக்கு இடமுண்டு. ஆனால் சோசலிச மயத்தில் (அரசாங்க அபகரிப்பில், தமிழுக்கு இடமே இருக்காது, ஏன் என்றால் இலங்கையில் இருப்பது உண்மையான சோசலிசமல்ல, சிங்களச் சோசலிசமே.

இச்சோசலிச அரசு சுதந்திரமாக வாழும் விவசாயிகளைக்கூட அடிமைகளாக்கத் திட்டமிடவும்கூடும்; 'நாட்டு நலன் கருதி' தமிழ்ப் பகுதிகளில் வெண்காயம் மட்டுமே பயிரிடப்பட வேண்டும், அதுவும் கட்டுப்பாட்டு விலைக்கு இல்லையேல் தோட்ட நிலங்களை அரசு எடுத்துக் கொள்ளும் என்று சட்டங்கூடக் கொண்டு வரலாம். அல்லது பொதுப்படையாக்க இன்ன இன்ன பகுதிகளில் குறிப்பிட்ட பொருட்களே பயிரிட வேண்டும் என்றும் சட்டமியற்றித் தமிழருடைய பொருளாதாரத்தை பாதிக்கலாமல்லவா? அதற்கேற்ற முறையிற்றானே புதிய அரசியற் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளது!

ஆகவே சிந்தியுங்கள், என் தமிழ் சகோதரரே சிந்தியுங்கள். சிந்திப்பீரா, அன்றேல், "தீழே சிங்கங் காத்திருக்க, மேலே மலைப்பாம்பு விழுங்கவர, தான் நின்றிருக்கும் மரக்கிளையும் முறியும்போது கூட, சிந்தையற்று, அயற்கிளையில் இருந்து சொட்டும் தேனைத்தொட்டு ருசிபார்த்த அவ்வேமாளி மனிதனைப் போல்" வாழாவிருப்பீரோ?!

ஆபத்து, ஆபத்து, விழித்திடுவீர், செயற்படுவீர். வென்றிடுவீர்

# பொதுவுடைமைவாதிகளின் நிர்வாகத்தால் வவுனியா கூட்டுறவு இயக்கத்துக்கு ஆபத்து!

வவுனியாத் தொகுதியில் கூட்டுறவு மறு சீரமைப்பின் கீழ் ஐந்து பெரிய ஆரம்ப சங்கங்கள் பதியப்பட்டுள்ளன. இவற்றிக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் நிருவாக அங்கத்தவர்களை நியமித்திருந்தார். இந் நியமனங்களின் போது கூட்டுறவில் அனுபவமுள்ளவர்களை யெல்லாம் புறக்கணித்துவிட்டு கட்சி ரீதியில் நியமனம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. ஐந்து சங்க நிருவாக சபைகளுக்கும், வவுனியாத் தொகுதியில் கடந்த தேர்தலில் சே. மா. செல்லத்தம்பு அவர்களுடன் போட்டியிட்டு கட்டுக்காசு இன்றி தோல்வியடைந்த திரு. செ. பத்மநாதனின் சிபார்சின் பேரில் நியமனங்கள் நடைபெற்றுள்ளதாம். இதில் வ. தெ. த. பல. நோ. கூ. சங்கத்திற்கு திரு. பத்மநாதன் தானே உப தலைவரானார். கூட்டுறவில் அனுபவமுள்ளவர்களை இவர் புறக்கணித்ததற்குக் காரணம் இவர்களெல்லாம் தமிழரசுக்கட்சிக்காரர்கள் என்பதே.

பொதுஉடைமைவாதிகள் நிருவாக சபையில் இடம் பெற்றதால் ஊழியர்கள் தங்களுக்குப் பெரும் நன்மைகள் கிடைக்குமென்று எதிர் பார்த்தனர். ஆனால் கடைசியில் ஏமாந்தனர். ஊழியர்கள் பழிவாங்கப்படுவதும், வஞ்சம் தீர்க்கப்படுவதும் மிகவும் மோசமாக உள்ளது.

தொழிலாள வர்க்கத்தின் நலனுக்காகப் பாடுபடும் பொதுஉடைமைவசதிகளின் ஊழியர்கள் பலர். (தங்களுக்குப் பிடிக்காத, தங்கள் கட்சியல்லாதவர்கள்) நியாயமற்ற முறையில் வேலை மாற்றம், இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர். வேலை மாற்றங்கள் செய்யும்போது 20 வருட சேவையில் இருந்தவர்களையெல்லாம், குறைந்த தரத்திலும் புதிதாக நியமனம் பெற்றவர்கள் உயர்ந்த தரத்திலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதிலும் தமிழரசுக்காரராக இருந்தால் தொலைவிலுள்ள காட்டுப் பிரதேசங்களுக்கு மாற்றம் செய்யப்படுகிறது. அத்துடன் முன்னைய ஊழியர்களுக்கே போதிய வேலை இல்லை. அவர்களுக்குப் போதிய சம்பளமும் கொடுக்கப் படவில்லை. தராதரமுள்ள உள்ளூர் இளைஞர்கள் பலர் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றிருந்தும் இவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். மற்று தமிழரசுக் கட்சிக் காரர்களும் சொந்தக்காரர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஜீப் வண்டியின் சேவை

ஒவ்வொருநிருவாகசபைக் கூட்டத்திற்கும் உறுப்பினர்களுக்கு ரூபா 10, பிரயாணச் செலவு வழங்கப்படுகிறது. இது போதாதென்று ஜீப் வண்டி வீடுவீடாகச்சென்று கூட்டத்திற்கு ஆள் ஏற்றியும் வருகிறது. பொது மக்களின் பொதுச் சொத்து, பொது உடைமை வாதிகளால் எப்படி வீண் வியரமாக்கப்படுகிறது என்று பொது மக்கள் ஏங்குகின்றனர்.

இத்தனை ஊழலுக்கும் இலக்காகியிருக்கும் பல நோ. கூ. சங்கத்தின் உப தலைவர் செ. பத்மநாதன் என்பதுதான் வேடிக்கை. ஒரு பல நோ. கூ. சங்கத்தை நல்ல முறையில் நடத்த முடியாதவருக்கு பா. உ. பதவியும் வேறு வேண்டும்?

இவைகள் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்திருப்பவர் இங்குள்ள கூ. உ. ஆணையாளர் தான் என்று மக்கள் பேசுகின்றனர். இவர் தான் மந்திரியின் கையாள் என்று சொல்லிக் கொள்கிறாராம். அத்துடன் இச்சங்கத்தின் தலைவர் நீலக் கட்சிக்காரராம். இவர்கள் எல்லோருக்குள்ளும் ஒரு ஒற்றுமை தமிழரசுக் கட்சிக்காரர் என்றால் கசக்குதாம்.

இந்த அநியாயத்தைக் கேட்பார் இல்லையா என்று

(11ம்-பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை உணர்ச்சியும் துடிப்பும் உத்வேகமும்

# மலையகத்தில் இன்று கரைபுரண்டோடுகிறது!

## ஆனால் அதை முறையாக வழிப்படுத்த ஏற்ற தலைவன் இல்லாததே இன்றுள்ள குறை!

### மலையக இளைஞர்கள் புதியதோர் தலைவரை அடையாளம் கண்டு அவர்வழி தொடர வேண்டும்!

மலையக மக்களின் நிலை அன்றும் இன்றும் என்றும் பெரும் பிரச்சினைக்குரியதாகத்தான் இருந்து வந்துள்ளது—வருகின்றது! மலையகத்தில் மறுமலர்ச்சியோ; விழிப்போ; விடிவோ; விமோசனமோ ஏற்பட்டு விட்டதாக இயம்பிடுவதும், எண்ணுவதும் எந்த அளவிற்கு உண்மையென்பதனைசிறிதேஆராயப்புகுமிடத்து: ஆங்காங்கே எம்மவர்கள் எத்தர்களாலும் ஏய்த்துப் பிழைப்பவர்களாலும், சில சுயகாரிய புலிகளாலும், பதவிமோகம் கொண்ட தலைவர்களாலும், ஏமாற்றப்படுவதையும், வஞ்சிக்கப்படுவதையும், எட்டப்பரினத்தாரால் காட்டிக் கொடுக்கப்படுவதையும் யாம் கண்கூடாகக்காணலாம்!

மலையகம் மறுமலர்ச்சியடைந்துவிட்டது: விழிப்படைந்துவிட்டது: விடிவு பெற்றுவிட்டது: விமோசனமடைந்துவிட்டது என்று பலவாறாக ஏட்டிலும், மேடைகளிலும், எழுதியும், பேசியும் வருபவர்கள் மேலெழுந்த வாரியாகவே மலையக மக்களுடன் இரண்டறக் கலந்து, அவர்களது வாழ்விலேற்படும் தாங்கொணாத, ஆற்ற முடியாத, தவிர்க்க முடியாத துன்பதுயரங்களில் ஒரு சில வற்றையேனும் கண்கூடாகக்கண்டவர்கள் ஒரு நாளும் மலையகம் விழிப்போ; விடிவோ; விமோசனமோ; மறுமலர்ச்சியோ அடைந்து விட்டதாகக் கூறமாட்டார்கள்!

அன்று போலவே இன்றும் மாட்டைவிட பன்மடங்கு உழைக்கின்றான் மலையகத் தொழிலாளி; கடுங்குளிரிலும், கொடும் வெய்யிலிலும், மழையிலும், காற்றிலும் பலவிதமான துன்ப தொல்லைகளையனுபவித்து மேட்டில் பள்ளத்தில் இறங்கியும், மூட்டைகளை சுமந்து கற்பாறைகளையுடைத்தும் கொடிய அட்டைகளுக்கு தங்களது பச்சை இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கக் கொடுத்தும் ஓயாது உழைக்கின்றாகள் இம்மக்கள்! சுகாதார வசதியற்ற அவர்களது வசிப்பிடமும், அநாகரிகச் செயலும், பகுத்தறிவற்ற போக்குமே அவர்களது அறியாமையையும், அன்றைய நிலையையும் எடுத்துக்காட்டுவதாயமைகின்றது! இந்நிலையில் இவர்களிருக்க எவ்வண்ணம் மலையகம் மறுமலர்ச்சியடைந்து விட்டதாகக் கூற முடியும்? ஏதோ காலஓட்டத்தால் மலையகத்தில் மாறுதல் ஏற்பட்டு விட்டதேயன்றி மலையகம் உயர்ந்து விட்டதாகக் கருதலாகாது! இதனையாணிக்கு கூறக் காரணமென்னவெனில்;

இந்த இருபதாம் நூற்றாண்டில் (அப்பலோ யுகத்தில்) நாம் இன்னும் மிகமிக பின்னணியில் இருந்திடுவதை தவிர்ப்பதற்கே! அன்று தொட்டு இன்று வரையிலும் மலையக மக்கள் தங்களுக்கு தகுதியும், திறமையும், பொது நலமனப்பான்மை உயர்ந்த குணமும் படைத்த தக்கதோர் தலைவரை தேர்ந்தெடுக்கத் தவறி விட்டார்கள்! இது மலையக மக்கள் விட்ட மாபெரும் தவறாகும்! ஏனெனில் கப்பலுக்கு மாலுமி எவ்வளவு அவசியமானவனோ; குடும்பத்துக்கு தலைவன் எவ்வளவு அவசியமானவனோ; வாகனத்துக்கு சாரதி எவ்வளவு அவசியமானவனோ; அவ்வளவுக்கவ்வளவு அவசியமானவன் தான் மலையக மக்களின் தொழிற்சங்கத் தலைவனும்! இந்த அடிப்படையில் நாம் மலையக தொழிற்சங்க தலைவர்களை நோக்குமிடத்து ஆங்கு அவர்கள் தொழிலாளர்களது நலன் காக்கவோ அவர்களது குறை நிறைகளையறிந்து அகற்றவோ அவர்களது உரிமைக்காகப் போராடவோ-அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சிக்காக வழி

## மலையகத்திலே.......

தனை வகுக்கவோ — மலையக மக்களது வாழ்வில் புதியதோர் சகாப்தத்தினை உண்டு பண்ணவோ; முழுமூச்சுடன் முன் நின்று முயன்று வருகின்றார்களா என்றால் அது தான் இல்லை!

அதற்கு மாறாக தொழிலாளர்களை சுரண்டிப்பிழைத்து அவர்களை ஏமாற்றி தங்களுக்கு வேண்டிய போதிய பணத்தையும், செல்வத்தையும், செல்வாக்கையும் தேடிக்கொண்டு தங்களது பிரேரணைகள் மாத்திரமல்ல; கொள்கை கோட்பாடு லட்சியமும் நிறைவேறாமல் தோல்வியடைந்தாலும் பதவியை விட்டு விலகாமல் பதவிமோகம் கொண்டு பதவியிலேயே இருக்கும் பதவிவாணர்களைத் தாம் யாம் கண்கூடாகக் காண்கின்றோம்! இப்படிப்பட்ட தலைவர்களால் மலையகத்தில்மறுமலர்ச்சியையோ, விடிவினையோ? விமோசனத்தையோ, ஏற்படுத்த முடியாது! உரிமையையும் பெற்றுத்தர முடியாது! இவ்வேளையில் மலையக மக்களை வழி நடத்த தக்கதோர் தொழிற்சங்கம்இல்லாததையுணர்ந்த இடது சாரி இயக்கமொன்று இதுதான் தக்க தருணமென்றுணர்ந்து ஆங்காங்கு மலையக மக்களிடையில் (குறிப்பாக இளைஞர்களிடையில்) புகுந்து அவர்களைத் தவறான வழியினில் இழுத்துச்செல்ல முற்பட்டு புரட்சியின் மகத்

பலாங்கொடை
இரா-மோசஸ்

துவத்தினை போதித்து மலையக இளைஞர்களை பலிக்கடாக்களாக்க முற்படுகின்றது!

இன்று மலையகத்தில் ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்களும், நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களும், பேச்சாளர்களும், பல பொது நல வாதிகளும், சில விடுதலை வேட்கையும், உரிமைப்பற்றும் கொண்ட இளைஞர்களும் இருந்து வருகின்றார்கள்! இளைஞர்களனைவரும் இப்பொழுதே தங்களுக்கு தகுதியும், திறமையும், பொது நல மனப்பான்மையும், அஞ்சாநெஞ்சமும், கொள்கைக் கோட்பாடுகளையே உயிரென மதித்து அவைகளினின்றும் பிறழாத வழுவாத ஓர் சிறந்த தலைவரை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்! இல்லையேல்;

இன்னும் கால் நூற்றாண்டுக்காலத்தின் பின் மலையக மக்களும் உரிமை கோரி உரிமைப்போராட்டம் நடத்தத்தயங்க மாட்டார்கள்! அவ்வேளையில் திரண்டெழும் மலையக இளைஞர்களை ஒழுங்காக வழி நடத்திடும் தலைவரில்லாது மாலுமியற்ற கப்பலாய்; சாரதியற்ற வாகனமாய்! தலைவனற்ற குடும்பமாய்; மலையக மக்கள் கண்ணைக் கட்டி காட்டில் விடப்பட்டவர்கள் போன்றும் சுயவர்களால் ஆட்கொள்ளப்பட்டு; நயவஞ்சகர்களால் வஞ்சிக்கப்பட்டு; துரோகிகளால் துன்புறுத்தப்பட்டு; எத்தர்களால்—பகல் விப்பித்தர்களால் ஏமாற்றப்பட்டு; எட்டப்பர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு; கடைசியில் கல்நெஞ்சர்களாலும், வன்நெஞ்சர்களாலும் எள்ளி நகையாடி ஏளனப்படுத்தும் அளவிற்கு எமது 'இளைய மலையகம்' எதிர்காலத்தினில் ஆளாகி விடக்கூடாது!

எனவே எமது 'இளைய மலையக'த்தின் எதிர்கால ஏற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும், மலர்ச்சிக்காகவும், உரிமை வாழ்விற்காகவும், தன்மானமிக்க வாழ்விற்காகவும், அடிமையற்ற வாழ்விற்காகவும், அமைதி நிறைந்த வாழ்விற்காகவும், சுபிட்ஷத்தென்றல் வீசிடும் வாழ்விற்காகவும், சுதந்திரம் நிறைந்த வாழ்விற்காகவும், இன்றே இப்பொழுதே நாம் நம்மை நேர்வழியினில்; செம்மைமிக்க செப்பனிட்ட வழியினில் வழிநடத்திச் சென்று வெற்றி வாகை சூடக்கூடிய சிறந்த-பரந்த-உயர்ந்த-உத்தம குணம் கொண்ட தலைவரொருவரை தேடிப்பிடித்து தலைவராக்கிக்கொள்ள வேண்டும்! இது இன்றைய மலையக இளைஞர்களின் முக்கிய கடமையாகும்!

## பூனைக் கூட்டம் ஆனோம்!

நினைத்து நினைத்து பார்க்கிறேன்
நினைவில ஏக்கம் கொள்கிறேன்!
இனிப்பில் நினைந்த வாழ்க்கையை
எண்ணி துயரம் கொள்கிறேன்!
மண்ணில் எங்கும் எம்கொடி
ஏறி பறந்த நாளை
கண்ணில் பார்க்க துடிக்கிறேன்!
காலம் வருமென நினைக்கிறேன்!

கிரேக்கம் ரோமு பலநாடும்
கண்டு வியக்கும் வாணிபம்
பெருக்கி வாழ்ந்த எம்மினம்
படும் துயரை பார்க்கின்றேன்!
அரக்கர் கையில் அகப்பட்ட
அப்பாவி மனிதன் போல்
சிறை வாழ்க்கை வாழ்கின்றோம்!
சிந்தை இல்லா வாழ்கின்றோம்!

எங்கள் அரசன் இராவணன்
எட்டு திசையும் ஆண்டனன்;
பொங்கும் வீரம் புகழுடன்
பாமனை முட்டி வென்றனன்!
இங்கு அவன் பரம்பரையோ
இருக்க மனு போடுதடா
பங்கம் பங்கம்... அந்தோ
பூனைக் கூட்டம் ஆனோம்!

— வி. எல். பெரைரா.

## பத்திரிகைத்தடைக்கு சமசமாஜிகளும் எதிர்ப்பு!

''இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தமிழ்ச் சஞ்சிகைகளுக்கு மட்டும் தடை விதிப்பது எமது அறிவு வளர்ச்சிக்கு நாம் தடை விதிப்பதாகும். இந்திய ஏடுகளால் நம்மவர்களின் தரம் மிக உயர்ந்துள்ளது என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சஞ்சிகைகள் தரங்கெட்டவை, அல்லது ஆபாசமானவை, அல்லது பிரயோஜனமற்றவை என்று குறிப்பிடுவதற்கு முன, இந்தத் தடையின் மூலம் எமது அறிவு வளர்ச்சிக்குத் தடைபோட முயலுகிறார்கள் என்றே கூற வேண்டும். இந்தியாவிலிருந்து வரும் சஞ்சிகைகள் தரம் கெட்டவை அல்ல. மேலை நாடுகளிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் அதிகமான ஆங்கில சஞ்சிகைகள், தரங்கெட்டவையும், பச்சையான ஆபாசங்களை கொண்டவையுமாகும். இந்திய சஞ்சிகைகள் எமது நாட்டு மாணவர்கட்கு எவ்வளவோ வகைகளில் பயன்படுகின்றன. எனவே அறிவுக்குத் தடை போடும் இம்முயற்சி ஏற்கக்கூடியதல்ல.''

இவ்வாறு இலங்கை சமசமாஜக் கட்சியின் கீழியங்கும் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் அமைப்புச் செயலாளர் திரு. எம். சந்திரசேகரன் இந்தியப் பத்திரிகைகளைத் தடை செய்வது சம்பந்தமாக பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தராதரப்பத்திர ஆசிரியர் நியமனத்தில் மலையக மாணவர் புறக்கணிப்பு

மலையகத்தில் சமீபத்தில் நியமிக்கப்பட்ட தராதரப் பத்திர ஆசிரியர் நியமனத்தில் மலையக மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். தகுதியான மாணவர்கள் ஜீ. ஸீ. ஈ. சித்தியடைந்த மாணவர் பலரிருந்தும் அவர்கள் நியமனம் பெற முடியாமல் போய்விட்டது.

ஒரு கல்வி வட்டாரத்தில் பத்து தமிழ் பாடசாலைகளில் சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது [illegible] கல்லூரிகளில் பத்து [illegible] பட்ட ஆசிரியர்கள் இன்று தேவைப்படுகின்றனர்: எல்லாப் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. மலையகம் முழுவதும் சுமார் 500 தமிழாசிரியர்களுக்கு மேல் இன்று நியமனம் செய்யவேண்டியுள்ளது. அடுத்தாண்டு மாற்றத் திட்டத்தில் இன்னும் பல ஆசிரியர்கள் சொந்த மாவட்டங்களுக்குச் செல்ல இருக்கின்றனர். அப்படியானால் மலையகப்பாடசாலைகளில் அதிகமான காலி இடங்கள் ஏற்படும்.

இன்றைய நிலையில் மாணவர்களுக்குப் [illegible] படிப்பிக்கவேண்டிய ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றுள்ளனர். இந்த இலட்சணத்தில் மலையகமாணவர் ஆசிரிய நியமனம் கிடைக்காது கைவிடப்பட்டுள்ளனர்; ஒரு கல்வி மாவட்டத்தில் அப்பகுதி மாணவர்கள் நியமிக்கப்படாது கைவிடப்பட்டதால் மாணவர்கள் ஏமாற்றம் அடைந்திருப்பதுடன் பாடசாலையில் படிக்கும் மாணவரும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் படிக்க முடியாது கஷ்டப்படவேண்டியும் ஏற்பட்டுள்ளது. இவர்கள் துயர் துடைக்க எவரும் முன்வரமாட்டார்களா? என்று கேட்கவேண்டியுள்ளது;

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் (21)



# தீக்குள் விரலை வைத்தால்...!

மனம் இருக்கிறதே அது ஒரு சகதி. அதில் நம்பிக்கை என்ற ஊன்றுகோலை நிறுத்தி விட்டால் அது நிலைத்திருக்காமல் அங்குமிங்கும் சாய்ந்து கொண்டிருக்கும். அதற்குக் காரணம் அந்த ஊன்றுகோலை ஆழமாக ஊன்றுதலாக இருக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலை சில சமயங்களில் ஆழமாக ஊன்றி அசையாது நிற்கும் அந்த நிலையையே அசையச் செய்து விடும். அப்படித்தான் எட்லின் கூறிய கதைகளைக் கேட்டதும் ரோஸியும் சிந்திக்கலானாள். அவள் முகத்தில் சிந்தனையின் குழப்பம் மலிந்து இருப்பதை உணர்ந்தார் அப்துல்லா.

'என்னால் நம்ப முடியவில்லை எட்லின். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் பொஸ்' என்றாள் ரோஸி.

'அதிக நம்பிக்கையே சில சமயம் நம்பிக்கை வைப்பவனை வேரோடு வீழ்த்தி விடக் கூடும். எதற்கும் தீர அறிந்து விடுவது தான் நல்லது' என்றார்.

ரோஸியும், எட்லினும் விடைபெற்றுப் புறப்பட்ட பொழுது மாலை நான்கு மணியாகிவிட்டது. அவர்கள் தான் காரில் இருந்தார்களே தவிர, அவர்களின் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை.

'என்ன இருந்தாலும் அவனை ரகுராமனிடம் பழக விட்டது உன் தப்புத்தான்' என்றாள் எட்லின்.

'எட்லின்! என்னை என்னவென்று நினைத்தாய்! நீ கூறுவது மட்டும் உண்மையாக இருந்தால்...!' என்று கூறிவிட்டு தன்பாட்டிற்கே தலையாட்டிக் கொண்டாள். பொலிசார் கம்பனியில் ரகுவைப் பற்றி விசாரிககவில்லையானாலும், விசாரணை நடத்தியிருநதார்கள். அதையே போன் செய்தி கூறியது.

ரதிதேவியின் வீடு அவர்கள் எதிர்பார்த்தபடி பூட்டப்பட்டுக் கிடந்தது. ரகுராமன் வீட்டில் இல்லை. அப்படியானால் எட்லின் கூறுவதிலும் உண்மையிருக்கத்தான் வேண்டும். அவனை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென ரகு ஒருவாரமாகப் பிடிவாதம் பிடித்தவன் பின்னர் ஏன் அவளுடன் சேர்ந்து திரிய வேண்டும்? சில சமயம் அவன்...?

'எட்லின்! ரகுராமன்தான் பெண்பித்துப் பிடித்தவனாயிற்றே! அந்தக் காரணத்தால் ரதியை அழைத்துக் கொண்டு அப்படி திரியலாமல்லவா?' என்றாள் ரோஸி.

'இங்கேதான் நீ தவறு செய்கின்றாய். ரகு சாமானியமானவனில்லை. அவனிடமிருந்து இரகசியங்களை அறிந்து கொண்டு எங்களையே மிரட்டிக்காரியம் சாதிக்கக்கூடியவன். என்னைக் காதலிப்பதாகக் கூறி என்னிடமிருந்தே விடயங்களை அறிய முயன்றான். ஆனால் நான்...'

'அது சரி; எட்லின்! அவன் அப்படித் தெரிந்து கொள்வதால் எமக்கு என்ன?'

'அவன் எங்களைக் கைப் பொம்மையாக்கி, நாகலிங்கத்திடம் பணம் கறந்தது போலக் கறக்க முனைவான் ரோஸி.'

'சரி சரி' என்று கூறிவிட்டு ஆழ்ந்த சிந்தனையில் மௌனமானாள்.

இரண்டு வாரங்களாக ரதிதேவியுடன் தான் அலைந்து திரிந்தான் ரகுராமன். அடிக்கடி அவள் அவனைத் தேடி வருவதும், இரவு நெடுநேரம் வரையில் ரகுராமனின் அறையிலேயே தங்குவதும், கதவைக் கூடப் பூட்டிக் கொண்டு இருவரும் தனித்திருப்பதும் அன்னபூரணி அம்மாளுக்கே அருவருப்பாக இருந்தது. பானுமதிக்கோ சொல்ல வேண்டியதில்லை. பகலில் அவள் கல்லூரிக்குச் சென்று விடுவதுண்டு. காலையில் சில நிமிடங்கள் மட்டுமே அவளுடன் உரையாடுவான். அதுவும் முன்போலில்லை என்றுதான் பானு உணர்ந்தாள்- ரதிதேவியைப் பற்றியோ, அவளுடன் சேர்ந்து திரிவதைப் பற்றியோ அவளும் எதுவும் கேட்பதில்லை. அவனும் கூறுவதில்லை.

பானுவினுடைய உள்ளம் அவன் செய்கைக்காக அடிக்கடி கலங்கும். ஆனால் அவன் அதை உணர்ந்தால்தானே?

'என்னிடம் இல்லாத எதை மற்றும் பெண்களிடம் அவன் காண விழைகின்றானே? என்னிடம் பெரிய மனிதத்தனமாக நடந்து கொள்ளும் அவன், மற்றும் பெண்களிடம் இப்படி ஏன் நடந்து கொள்கிறான். மனிதத் தன்மைக்கு, உயர்ந்த மனிதனுக்கு அத்தாட்சியாக ஒரு கணம் காட்சியளிப்பவன், மறுகணம் மனிதப் புழுவாகத் தோன்றுவதேன்? இதைப் பற்றி மேலும் அவனிடம் பேசவே அவள் விரும்பவில்லை. அப்படி விரும்பாததற்குக் காரணங்களும் இருந்தன. அவனுடன் பேசினால் அந்தப் பேச்சே கடைசிப் பேச்சாக முடிந்துவிடுமோ என அஞ்சினாள். பானு அவன் இஷ்டப்படி எல்லாம் அவள் நடக்கத் தயாராகத் தான் இருந்தாள். அவன்...?

அன்று மாலை கல்லூரியால் பானு வந்து கொண்டிருக்கும் பொழுது, ரதிதேவியுடன் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தான் ரகுராமன். பானுவைக் கண்டவுடன் அவன் சிரிக்க முயன்றான். ஆனால் பானு அதைப் பாராதவள் போன்று அலட்சியமாகச் சென்று விட்டாள் தன் முன்னிலையில் வேறு ஒருத்தியுடன் செல்வதைப் பெருமையாக அவன் நினைக்கிறானா? அவனைப் பொறுத்த வரையில் அது பெருமையாக விருக்கலாம். ஆனால் தன்னையே நம்பியிருக்கும் ஒருத்தியின் மனதைக் கசக்கிப் பிழிகின்றோமே என்று அவன் நினைக்கவில்லையே! பெண்களின் ஒவ்வொரு அசைவிலும் ஆண்கள் அசைந்து தம் மனதை அலட்டிக் கொள்வார்கள் என்று கவிஞர்கள், கதாசிரியர்கள் எல்லாம் புழுகுவார்களே! இவனோ ஒவ்வொரு பெண்ணின் மனத்தையும் கலக்கி எருமை குளித்த குட்டை போலாக்கி விட்டுச் சிரித்து விளையாடுகின்றானே! அது பற்றிக் கவலைப்படுபவனாகவும் தெரியவில்லையே! எனக்குமட்டும் யோக்கியமானவனாக நடந்து கொள்வது, தன்னையே நான் விரும்பி விரும்பி ஏங்கிச் சாகவேண்டும் என்பதற்காகவா?

இரவு ஒன்பது மணியளவில் ஓர் வாடகைக் காரில் வந்து இறங்கினர் இருவரும். அந்த வாடகை வண்டி ரோட்டில் நின்று கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் உள் வீட்டிற்கும் ரோட்டிற்கும் இடையேயுள்ள நடைபாதையில் நின்று கொண்டிருந்ததைப் பானு பார்த்தாள். அவர்கள் இருவரும் என்ன தான் கதைக்கின்றார்கள் என்று அறிய விரும்பியது அவள் மனம். ஒட்டுக் கேட்பது தவறு என்று தெரியும். ஆனாலும் மனித மனம் தவறு என்று தெரிந்து கொண்ட பின்பும் பல தவறுகளைச் செய்கின்றதுதானே! எனவே தன்னுடையவனாகப் போகின்றவன் அந்தப் பெண்ணிடம் என்ன கூறுகின்றான் என அறிய அவள் ஆவல் கொண்டது தவறு என்றும் கூற முடியாது. சில வேளை அப்படிக் கேட்பதின் மூலமே அவள் சந்தேகம் நீங்கவும் கூடுமல்லவா?

அவர்கள் நின்ற இடத்துக்குச் சமீபமாக அவள் வரவில்லை. பக்கத்திலிருந்து வளர்ந்த குரோட்டன் செடிகளுக்கு அருகே நின்று விட்டாள். அவர்கள் அங்கே கதைப்பது அவளுக்கு நன்கு தெளிவாகக் கேட்டது.

'மிஸ் ரதி! நீ நினைப்பது போல் பயப்பட வேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை; உனது ராஜினமாக் கடிதத்தைப் பதிவுத் தபாலில் அனுப்பி வை. ஏதாவது நடந்தால் உடனே எனக்கு அறிவித்து விடு. உன் வீட்டில் போன் இருக்கிறதுதானே?'

'இருக்கின்றது'

'என்னிடம் ஏதாவது கூறினாயா என்றால் கிடையாது என்று கூறிவிடு நான் மிகுதியை ரோஸியுடன் பேசிக் கொள்கிறேன்' என்றான்.

'ரகு! உங்களுக்கு...

'எனக்காக நீ பயப்பட வேண்டாம். நீ என்னிடம் எதுவும் சொல்லிருப்பாய் என அறிந்தால் உனக்குத் தான் ஆபத்து.' என்றான்.

ரோட்டில் அப்பொழுது ஒரு லொறி இரைந்து கொண்டு சென்றதால் அவளுக்கு அவர்கள் உரையாடலில் பெரும் பகுதியும் கேட்கவில்லை. 'உனக்குத்தான் ஆபத்து' என்று ரகு கூறியது மட்டுமே கேட்டது. அவள் டாக்ஸியை நோக்கிச் சென்றாள். ரகுவும் வீடுநோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

இரண்டு நாட்களுக்குப் பின் ரோஸிக்குப் போன் செய்தான் ரகுராமன். அவள்தான் போனை எடுத்திருந்தாள்.

'ஹலோ ரோஸி! ரதிதேவி சம்பந்தமாக நான் உன்னிடம் கூறியது ஞாபகமிருக்கா?'

ஜெஸ், ஜெஸ். மிஸ்டர் ரகு! நீ அவள் விடயத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அவள் ஒரு கொலைகாரி. பணத்துக்காகவே ராமச்சந்திரனைக் கொலை செய்தவள். எங்கள் கம்பனி பற்றி இல்லாத பொல்லாத கதைகளை அவனிடம் கூறி பொலிசில் முறையிடச் சொல்லியிருக்கின்றாள். விபரம் எங்களுக்குத் தெரிந்த பொழுது அவனைக் கொலை செய்து விட்டாள். அவளோடு நீ நெருங்கிப் பழகுவதாக அறிகின்றேன்... உனக்கும்...'

'ராமச்சந்திரனின் கதி நேராதிருக்கவேண்டும். அப்படித்தானே நீ நினைக்கின்றாய் ரோஸி.'

'ஜெஸ், ஜெஸ்.'

'ரோஸி! அவளிடம் ஒரு 'அக்கிரிமென்ட்' எழுதி வாங்கிக்கொண்டு அவள் விருப்பப்படி நடந்துகொண்டால் என்ன?'

''அதுவும் சரிதான் ரகு. ஆனால் அவள் சம்பந்தப்பட்ட விடயத்துக்கு நீ பொறுப்பேற்கத் தயாராக இருக்கின்றாயா ரகு?'

'நானா? சரி ரோஸி.'

'உனக்கு ஏதாவது பயன் கிடைச்சுதா?' என்று கேட்டுவிட்டு ரோஸி சிரிப்பது கேட்டது.

'ரோஸி! சிரிக்கிறாயா?'

## யாழ். ஜனார்த்தனன்

'எட்லின் கூட இங்கே இருக்கிறாள். அவள் உன்னிடம் பேச விரும்புகின்றாள்.' என்று கூறிவிட்டு, போனை அவளிடம் கொடுத்தாள்.

'ஹலோ ரகு! எப்படி?' எட்லின் குரல்.

'எட்லின் டியர்! உன் குரலைக்கேட்கும் பொழுது எனக்கு...'

'ஏன் ரகு! ரதிதேவி எப்படி?'

'ஷீ இஸ் வெறி புவர் பட்...'

'ரகு! டு யு லவ் மீ!'

'ஏன் இந்தச் சந்தேகம்?'

'டு யு லவ் மீ? கமோன்! ரெல் மீ, ரகு.'

'ஜெஸ், ஜெஸ்'.

'அப்படியானால் ரதி...? இடையில் ஏற்பட்ட தாகமா?'

'எட்லின்! நீ என்னைத் தவறாகப் புரிந்து விட்டாய். பரவாயில்லை. விரைவில் நீ என்னைப் புரிந்து கொள்வாய்.' என்று கூறி விட்டு போனை வைத்து விட்டான்.

அன்று மாலையே ரதிதேவியிடம் விபரம் கூறி அவளை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அவனுக்கு அவளைப் பற்றிய விடயத்தில் மன நிம்மதி ஏற்பட்டிருந்தது. நடந்து முடிந்தவைகளை அன்றிரவு பானுவுக்குச் சொல்ல வேண்டுமென்றிருந்தான். ஆனால் பானுவுக்கு அன்று கல்லூரியில் பரிசளிப்பு விழா இருந்ததினால், அவள் இரவு பத்துமணியாகியும் வீட்டுக்கு வரவில்லை. திடீரென போன் மணி ஒலித்தது. ஓடிச் சென்று போனை எடுத்தான் ரகுராமன். பானு தான் போன் செய்தாள்.

(10-ம் பக்கம் பார்க்க)

## கனவு கண்டு....

புகைவண்டி இருக்கையிலே புத்தகத்தில்
  புதைந்திருந்தேன்...வள்ளுவனின் குறள் நூலையா!
நகையினிலும் மெல்லநகும் இனிய பெண்ணை
  நயந்தோடும் பாடுகின்ற காமத்துப்பால்
வகையறியா இன்பத்தை வழங்க முன்னாள்
  வாழ்ந்த தமிழ்ப் பெண்ணாரை எண்ணி இன்பம்
மிகையாக மெய்மறந்து தூங்கிவிட்டேன்...
  விழிகளிடை உலாப்போனேன்...கவிதைகேளீர்!

குழல்பரப்பி உட்கார்ந்து பெண்கள் கூட்டம்
  குசுகுசெனப் பேசுதல்போல் குளிர் நிலாவில்
நிழல் பரப்பி வீற்றிருக்கும் மாமரங்கள்...
  நீலமணி போல் ஆங்கோர் இனிய பொய்கை...
சுழல்தென்றல் விட்டுவிட்டுச் சுகங் கொடுக்கும்
  சோலையிலே வெண்மணலாம் இயற்கைப்பாயில்
தழல் நிறத்தில் ஒருமங்கை சாய்ந்திருந்தாள்
  தனித்திருந்தாள் தமிழச்சி...சந்தித்தேனே!

நானொருவன் ஆணென்று தெரிந்தாள் நங்கை
  நண்டைப்போல் வெகுண்டோடி ஒருபால் நின்றாள்!
'ஏனடியோ?' எனக்கேட்டேன்...ஏதும்பேசாள்
  இயல்பாக நிலம்நோக்கி இருந்தாளம்மா!
தானணிந்த மேலாடை தன்னைக் கையால்
  சரிசெய்தாள்...வியர்வையினால் நனைந்து போனாள்!
தேனழகி நாணத்தின் சுமை தாங்காமல்
  சிவப்பானாள்...செவ்வரத்தம் பூப்போலானாள்!

பூங்கொடியின் குழைவொன்றும் பூத்துக்காய்த்த
  பொன்வாழை மரவளவும் மேனிகாட்டும்
மூங்கில் இலை போலன்றி தேக்கிலைபோல்
  முழுதுடலும் மறைக்கின்ற ஆடையொன்றும்
தாங்குமன அச்சத்தை வெளிப்படுத்தும்
  தளிர்க்கையின் படபடப்பும் தங்கவண்ண
மாங்கனிபோல் பேசாத அழகும் கொண்டாள்
  மாரியம்மன் சிலைபோல நின்றாளம்மா!


எடை குறையாத் தமிழ்மங்கை எதிரே நின்றாள்!
  எனை மறந்தேன்...அடடாவோ...சங்கை ஊதி
இடைநடுவே புகைவண்டி இரைந்து கத்த
  இருவிழியும் நான்திறந்தேன்...ஒருவன் ஆங்கே
'வடை வடை' என்றே இரைந்தான்...நிமிர்ந்து
  பார்த்தேன்...
  வண்டியிலோர் தமிழச்சி 'மினி' அணிந்தாள்
தொடைதெரிய எதிர்ப்புறத்தே வீற்றிருந்தாள்!
  தூ...சனியன்! மூதேவி! துடைப்பக்கட்டை!

அத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழக பத்திரிகை இறக்குமதித் தடை- ஈழத் தமிழர்கள்மீது விழும் பயங்கர அடி'

## மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை கண்டனம்!



'தமிழகத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளின் இறக்குமதியை மட்டும் தடை செய்வது இலங்கைத் தமிழ் மக்களின் கலை வளர்ச்சியை தடைசெய்வதாகும். இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் மீது எடுக்கப்படும் மற்றுமொரு மொழித்தடுப்பாகும்.

இத்தடைக்கு கூறப்படும் காரணங்கள் இரண்டு. முதலாவது அந்நியசெலவாணி விரயமாவதென்பது. அரசியலில் ஆங்கிலமொழி வகிக்கும் இடத்தை அகற்றி சிங்கள மொழியையும், தமிழ் மொழியையும் இடம்பெறச் செய்வது நோக்கமென்று கூறப்படும் பொழுது ஆங்கில ஏடுகள் இறக்குமதிக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் அந்நிய செலவாணி வழங்கப் படுகிறதே அது ஏன்? தரம் குறைந்த-பால் உணர்ச்சியையும், கொலை, களவு, கற்பழித்தல் போன்றவற்றை கருவூலமாகவைத்து வெளியாகும் ஆங்கில வெளியீடுகள் இறக்குமதி செய்ய இடமளிப்பதேன்? கீழைத்தேச நாடுகளின் கலாசாரம் — நாகரீகம் மிகப் பழமையானவை. புனிதமானவை. அவற்றுக்கு சவால் விடும் வகையில் அமைந்த—ஏன் அவற்றையே ஆழக்குழி தோண்டி புதைக்கத்தகுந்த ஆங்கில ஏடுகள் தருவிக்கப்படுகின்றன. அவற்றினால் அந்நிய செலவாணி விரயமாகவில்லையா? அவற்றை ஏன் தடுக்கவில்லை?

இரண்டாவது: தமிழகப் பத்திரிகைகளை தடை செய்வது உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும். என்று சொல்லப்படுகிறது.

இலங்கை எழுத்தாளர்களின் கருத்தோவியங்கள் கடந்த கால் நூற்றாண்டுகளாக தமிழகத்தின் முதல்தர இதழ்களில் இடம் பெற்று வருகின்றன. "திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கவிக்கு நிகரான எழுத்தாளர்கள் இலங்கையிலுண்டு. நம்எழுத்தாளர்களின் ஆற்றலை வளர்க்க வெளிநாட்டு ஏடுகளை தடைசெய்வது பொருத்தமான காரணமாகாது.

உள்ளூர் நெல்லுடன் ஜப்பான் நாட்டு நெல்லை சேர்த்து அதிக விளைச்சல் பெற புதுரக நெல்லை உருவாக்குவதை காண்கிறோம்.

உள்நாட்டு மாடுகளுடனும்—ஆடுகளுடனும் வெளிநாட்டு அதிக பால்தரும் மாடுகளையும் ஆடுகளையும் இணையச்செய்து புது இனத்தை உருவாக்குவதைக் காணலாம்.

இவ்வண்ணம் உணவுதரும் பயிர்களிலும், அழகுதரும் மரங்களிலும் சேர்க்கை நடைபெறுவதைக் காணலாம்.

உலகநாடுகளில் பலநாடுகள் கூட்டுத்தயாரிப்பில் சினிமாப்படங்களை உருவாக்குவதைக்காணலாம். புது உத்திகளைக் கையாளவும் தங்களுக்குத்தெரியாத மற்றோருக்கு புரிந்து ஆற்றலை அறியவும் ஒருவருக்கொருவர் திறமைகளை பரிமாறிக்கொள்ளவும் கலாச்சார தொடர்புகளை ஆக்கிக்கொள்ளவும் ஒருநாடு மற்றொரு நாட்டுடன் தொடர்புகொள்வதைக்காணலாம்.

தங்கள் நாட்டு பத்திரிகைகள், தங்கள் நாட்டு சினிமாக்களை தவிர வேறு எந்த நாட்டு பத்திரிகைகளையோ—சினிமாக்களையோ—கலாச்சார நிகழ்ச்சிகளையோ பார்க்கக்கூடாதென்று தடைசெய்த நாடுகள் பல இன்று அத்தடையை நீக்கியிருப்பதைக் காண்கின்றோம்.

ஆகவே உள்ளூர் எழுத்தாளர்களின் எழுததாற்றல் தமிழகப் பத்திரிகைகளை தடை செய்வதினால் வளர்ந்து விடாது.

"தமிழகப்பத்திரிகை இறக்குமதிக்கு விதிக்கப்படும் தடை இலங்கை தமிழ் பேசும் மக்களின்மீது—அவர்கள் இலக்கிய — கலாச்சார வளர்ச்சியின் மீது அடிக்கப்பட்ட பயங்கர அடியாகும் என்பதில் ஐயமில்லை."

— இவ்வாறு மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

---

# ஈழ-தமிழக உறவுக்கு மீண்டும் உலைவைக்க....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களா? அவர்கள் எம்மிடமும் திறமை இருக்கிறது என்று தான்சொல்லியிருப்பார்கள். எம்மாலும் திறமையாகப் படைக்கமுடியும் என்றுதான் சொல்லியிருப்பார்கள்: எமக்கும் எமது படைப்புகளுக்கும் ஆதரவு தருவார்கள் என்றுதான் கேட்டிருப்பார்கள்! ஆம், உண்மையான எழுத்தாளர்கள் — திறமான புலமையுள்ளவர்கள் பிறரை மட்டந்தட்டியோ குறுக்குவழியிலோ புகழ்பெற விரும்பவில்லை.

இந்த நாட்டின் பெரும்பான்மையான தமிழர்களின் பிரதிநிதிகள் கேட்டார்களா? அல்லது எம்மிடையேயுள்ள மொழிவழித்தொழிற்சங்கங்கள், தமிழ் மொழி வளர்ச்சியில் அக்கறையுள்ள கழகங்கள், இலக்கிய ஆர்வம் கொண்ட மன்றங்கள் அப்படிக்கேட்டனவா?

இவையெல்லாவற்றிற்குமுரிய பதில் 'இல்லை' என்பதுவே! அப்படியானால் இத்தற்கொலைக்கு ஒப்பான திட்டத்திற்கு உடந்தையாக இருப்பவர்கள் யார் தெரியுமா?

ஒன்று தினபதி பத்திரிகை. தினபதி எதையாவது வரவேற்கிறது — போற்றுகிறது என்றாலே அது தமிழினத்துக்குப் பாதகமான ஒரு விவகாரமாகத்தான் இருக்க வேண்டும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. தினபதியும் அதன் சகோதரப் பத்திரிகைகளும் மேற்படி தடையையும் கட்டுப்பாட்டையும் வரவேற்கின்றன — தலையங்கங்கள் கூட தீட்டுகின்றன என்பதிலிருந்தே இது தமிழினத்துக்கு எவ்வளவு பாதகமானது என்பது புரியவில்லையா?

இரண்டு, முற்போக்கு எழுத்தாளர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் பொதுவுடைமைவாதிகள் ஒருகாலத்தில்' ஆறுமுகநாவலருக்குச் சிறுகதை எழுதத் தெரியுமா?' என்று கேட்ட இவர்களுக்கு இப்பொழுது தேசிய உணர்ச்சி வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி; தமிழக ஏடுகளுக்குத் தடைவிதிப்பதை எதிர்க்கும் எம்மையெல்லாம்விட இவர்களுக்குத்தான் அந்தக் காலத்தில் தமிழகத்தின் மீது அதிக காதல் இருந்தது. தமது நூல்களை தமிழகத்தில் அச்சிட்டு வெளியிடுவதைப் பெருமையாகவும், தமது நூல்களுக்கு தமிழக எழுத்தாளர்களின் மதிப்புரையைப் பெறுவதில் பூரிப்பும் அடைந்தவர்கள் இவர்களே!

ஆனால் அப்படி எத்தனை திருவிளையாடல்கள் செய்தும் பயனில்லாமல் போகத்தான் இப்பொழுது குறுக்கு வழியில் தமது விலைபோகாத சரக்குகளைக் கட்டி அடித்துப் புகழ்பெறப் பார்க்கிறார்கள்!

மூன்றாவது, திரு. செல்லையா குமாரசூரியர்! இவருக்கும் இலக்கியத்துக்கும் — அதுவும் தமிழ் இலக்கியத்துக்கும் அமைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ பாவம், மேற்படி இரு சக்திகளும் சேர்ந்து இவரை முடுக்கி முன்னுக்குத் தள்ளி விட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது.

தமிழகசஞ்சிகைகளின் கட்டுப்பாட்டை வரவேற்பவர்கள் 'தரமான சஞ்சிகைகள் இறக்குமதியாவதற்கு வழி செய்திருக்கும்போது அதை எதிர்ப்பது தகாது' என்கிறார்கள்.

அரசாங்கம் சில குறிப்பிட்ட சஞ்சிகைகளை மட்டும், அதுவும் குறிப்பிட்ட அளவே இறக்குமதிக்கு அனுமதித்திருக்கிறது. தரமானது தரமற்றது என்பதிலேயே இங்கு கருத்து வேறுபாடுண்டு. அரசாங்கம் இறக்குமதிக்கு அனுமதி மறுத்திருக்கும் சஞ்சிகைகள் அத்தனையும் தரமற்றது என்று சொல்லமுடியாது. அம்புலிமாமாவையும் மாத சோதிடத்தையும் விட எந்த வகையில் தமிழரசும் மறவன் மடலும் தரங்குறைந்ததோ?

சரி, அரசாங்கம் தரமானது எனக் கருதும் சஞ்சிகைகள் அத்தனையையும் நாமும் தரமானது என்றே வைத்துக் கொள்வோம். தரமான அந்தச் சஞ்சிகைகளைக்கூட அவைகளைப் படிக்க விரும்புவோர் கட்டுப்பாடு காரணமாக நம் பிக்கையாகப் பெறமுடியாத நிலையன்றோ வரப்போகிறது. எல்லாருக்கும் எல்லாம் இடைக்க வழி சொல்லும் சோசலிச அரசு படிக்க விரும்புபவர்களிலும் சிலருக்கு மட்டுமே சஞ்சிகைகள் கிடைக்க வழி செய்திருப்பதற்குப் பெயர் என்ன?

கட்டுப்படுத்தப்படவிருக்கும் சஞ்சிகைகள் கூட பின்னர் இங்கு போதியளவு சஞ்சிகைகள் தோன்றியதும் முற்றாக நிறுத்தப்படுமாம். அப்பொழுது இங்கு போதியளவு தோன்றாவிட்டாலும்,—அல்லது தோன்றிவளர்ச்சி பெறாவிட்டாலும்கூட அதே காரணத்தை வைத்து நிறுத்திவிடலாம்.

அவ்வளவுதான் தொல்லை, அவ்வளவோடு விட்டதென்று கூறமுடியாது, அதன் பின்னரும் இது போன்ற காரணங்களைக் கூறி தமிழகத்து நூல்களில் கைவைப்பார்கள். தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் நூல்களையும் முதலில் கட்டுப்படுத்திப் பின்னர் முற்றாகத் தடைசெய்வார்கள்.

இவை எல்லாவற்றுக்குமே அடிப்படைக்காரணம் தமிழகத்திலிருந்து எம்மைத் தனிமைப்படுத்துவதே! நாம் எந்த நாட்டைப்பற்றியும், அங்குள்ள கலை இலக்கியங்களைப் பற்றியும் அறியலாம். ஆனால் எமக்கு மிகவும் உரிமையுள்ள தாயகத்தோடுள்ள உறவு மட்டும் துண்டிக்கப்படவேண்டுமாம். இதற்கெல்லாம் இங்குள்ள தன்மானமும் தமிழுணர்ச்சியுமுள்ள தமிழர்கள் உடன்பட முடியாது— உடந்தையாகவும் இருக்கமுடியாது என்பதை மிகவும் அழுத்தந்திருத்தமாக கூறிக்கொள்ள வேண்டும்.

# மக்கள் குரல்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மறந்தும் இந்தக்கேவலமான ஏடுகளை தீண்டக்கூடாது; இந்தத் "தரம்" போனதுகளின் புகழ்பாடி வயிறு வளர்க்கும் ஏரிக்கரைச்சாக்கடை ஏடுகளை இனி ஏறெடுத்தும் பார்க்காமல் மறப்போம்:

"தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடேன்" எனப்பொங்கியெழும் தமிழ் இளைஞர் கூட்டம் "தந்தை செல்வாவை இழித்துக்கூறியவனை இறைவன் தடுத்தாலும் விடேன்" எனப்பொங்கியெழ வேண்டும் அப்போது தான் இத்தரங்கெட்டுப் போன தமிழர் கூட்டம் தலை குனியும்.

எஸ். ஷண்முகநாதன்
சாவகச்சேரி

★

எமது ஈழத்தமிழகத்தின் ஒப்பற்ற தலைவரும் எமது இனத்தின் தந்தையுமாகிய திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இதுவரை காலமும் அறியாமல் இருந்த என் போன்றோருக்கு அறியக்கூடிய அரிய வாய்ப்பொன்றை உணர்ச்சிக் கவிஞர். திரு. காசி ஆனந்தன் தினகரன் வாரமஞ்சரி மூலம் அறியத்தந்து கொண்டிருந்தார்.

அண்மையில் கடந்த வாரம் தினகரனில் அக்கட்டுரை தொடர்ந்து வெளிவராதது கண்டு என்னவோ ஏதோ என்று எண்ணிக் கொண்டிருந்த எமக்கு இன்றைய சுதந்திரன் செல்வா கட்டுரைக்குத் தினகரனில் தடை என்ற முகப்புச்செய்தியுடன் வந்து கட்டுரை வெளிவராமைக்கு காரணத்தையும் புரிய வைத்தது. அதுவும் தமிழமைச்சர் ஒருவரின் உத்தரவுப்படியே இது நடைபெற்றதென அறிந்ததும் எமது நெஞ்சம்படும வேதனை சொல்ல முடியாது. வெட்கம் வெட்கம் நெல்லுக்குள்ளே பதர் இருப்பது போல் எமது சமூகத்துள்ளும் புல்லுருவிகள் இருக்கிறார்களே...!

நாவலருக்கு நினைவு முத்திரை வெளியிடுகிறார்களாம் —நாவலரின் வாழ்க்கை வரலாறு புரியுமா இவர்கட்கு. ஆட்களைப்பேய்க்காட்டுகிறார்கள். தமிழரசுக்கட்சியென்றால் இவர்கட்கு சிம்மசொப்பனமாய் இருக்கின்றது:

தமிழரசுக்கட்சி மகாநாட்டுக்கு தடை, தமிழ் சஞ்சிகைகள் வெளிநாட்டில் இருந்து வருவதற்கு தடை, தபாலில் தமிழில் சீல் அடித்தால் அதற்கு தடை, முக்கிய இடங்களில் பெயர் பலகையில் தமிழில் எழுதுவதற்கு தடை, இவைகள்தான் ஒருபுறம்போக, மிதித்த இடத்தில் புல்லும் சாகாது நடக்கும் எமது தந்தையின் கட்டுரைக்கு தடை, தமது கட்சி சார்புள்ள அங்கத்தவர்கள் வெளிநாடு சென்று வந்து தான் அங்கே போனேன் இங்கே போனேன் என்று எழுதினால் அதை தினகரனில் பிரசுரிக்கலாம். என்னையா பத்திரிகா தர்மம் என்னையா சோசலிசம்?

தந்தை செல்வா என்ன பயங்கரவாதியா, கொலைகாரரா, கற்பழித்தாரா, குறுக்குவழியால் பதவிக்கு வந்தாரா தினகரனில் அவரின் கட்டுரையை தடைசெய்வதற்கு? அவர் செய்த குற்றம் தான் என்ன? தினகரன் ஆசிரியரே கூறும்? இதற்கு தடையாக இருந்த கயவர்களே கூறுங்கள்.

இங்ஙனம்
குரும்பசிட்டி கந்தையன்

# திக்குள் விரலை...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

'பானு நீயா? உன்னிடம் மிக முக்கியமான விடயம் கதைக்க வென்று இருந்தேன். நீ எனக்குக் கூடச் சொல்லவில்லையே? பானு;' என்றான்.

'நான் சொல்லத்தான் நினைத்தேன்: முயன்றேன். நீங்கள் அப்படி ஒரு நிலையில் இல்லாத போது எப்படிக் கூறுவது?

'பானு! நீ மீண்டும் பழைய பானுவாகத்தான் இருக்கின்றாய் போலிருக்கே!'

'நீங்கள்...வேண்டாம் ரகு; நான் இரவு வர நேரமாகும்; இரண்டு மணியளவில்தான் வருவேன். வெளிக்கேற்றைப் பூட்டாது விட்டால் நல்லது.' என்று கூறிவிட்டுப் போனை [illegible]

ரகுராமனுக்கு அதிர்ச்சி தாளவில்லை. அவன் [illegible]டு பெரும் சச்சரவு ஒன்று மீண்டும் ஏற்படப் போகின்றது என்பதை உணர்ந்தான். அதே வேளையில் மீண்டும் போன் மணி ஒலித்தது.

'ஹலோ! ரு நோட் திறீ. ரகு ஸ்பீக்கிங்.'

'ரகு! எனக்குப் பயமாயிருக்கு ரகு. தயவுசெய்து என் வீட்டுக்கு வந்து போங்கள்.' ரதிதேவிதான் அழைத்தாள்.

'இந்த நேரத்திலா?'

'ரகு! பிளீஸ் என்னைக் காப்பாற்றுங்கள்.' என்று அவள் கெஞ்சுவது அவன் மனதை உருக்கியது. அடுத்த நிமிடமே அவன் தம்பி சிவராமனின் சைக்கிளை எடுத்துக் கொண்டு விரைந்தான்.

அவன் மனதில் பல்வேறு சிந்தனைகள். ஒரு மணிநேரத்தின் பின் அவள் வீட்டையடைந்தான். அவள் வீட்டில் மின் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கதவும் திறக்கப்பட்டே இருந்தது.

அவனை அழைத்தவாறே உள்ளே சென்றவன், படுக்கை அறையில் அவள் மீளாத துயிலில் ஆழ்ந்து விட்டிருப்பதைக் கண்டு திகைத்தபடியே நின்றான்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநாட்டுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு தொகுதிக்கும் ஆகக் குறைந்தது ஐந்து புதிய கிளைகளையும் நிறுவி கட்சியின் அமைப்பை வலுப்படுத்துவதென்றும் யாழ் நகரில் கூடிய தமிழரசுக்கட்சியின் செயற்குழு முடிவு செய்துள்ளது.

புதிய உறுப்பினர்களை திரட்டுதல், கிளைகளை அமைத்து கட்சியின் அமைப்பினை வலுவாக்கல் ஆகிய பொறுப்புக்களை சாவகச்சேரி பா. உ. கடமை வீரர் திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் இயங்கவிருக்கும் கட்சியின் அமைப்புக்குழு ஏற்று இவ்விரு பணிகளிலும் தீவிரமாக ஈடுபடவிருக்கிறது.

### நவம் அறிக்கை

இது சம்பந்தமாக திரு. வி. என். நவரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

'என் இனிய தமிழ் மக்களே, தம்பிகளே, தங்கைகளே, எமது கட்சியின் அடுத்த அரசியல் நடவடிக்கையென்னவென்று பலரும் கேட்கிறார்கள். எந்த ஒரு அரசியல் நடவடிக்கையிலும் நாம் இறங்குவதற்கு முன்னர் நமது இயக்கத்தை அமைப்பு ரீதியாக வலுப்படுத்தல் இன்றியமையாததாகும். அடுத்த சனவரியில் நடைபெறும் இயக்க மாநாட்டில் அரசியல் நடவடிக்கை பற்றி தீர்மானிக்கவிருக்கிறோம். அதற்கு முன்னர் கட்சியை வலுப்படுத்திட வேண்டியது எமது அதி முக்கிய கடமையாகும். இதற்கு இரண்டு திட்டங்களை நாம் போட்டுள்ளோம்.

(1) சனவரி மாநாட்டுக்கிடையில், 10,000 புதிய சந்தா செலுத்தும் உறுப்பினர்களை திரட்டுவது.

(2) ஒவ்வொரு தொகுதியிலும் ஆகக் குறைந்தது ஐந்து புதிய கிளைகளையாவது நிறுவி அவற்றை இயங்க வைப்பது—

'இந்த இரண்டு பணிகளையும் கட்சியிலுள்ள ஏனைய நண்பர்களின் உதவியுடனும் ஒத்தாசையுடனும் தமிழ் மக்களின் ஒத்துழைப்புடனும் செய்து முடிப்பது என்று நான் உறுதிபூண்டிருக்கிறேன்.

'அமைப்புக்குழு விரைவில் கூடி இதற்கான நிகழ்ச்சி நிரலை தயார் செய்ய விருக்கிறது. அந்நிகழ்ச்சி நிரல் சுதந்திரனில் வெளியிடப்படும். அதன்படி ஏற்றுக்கொண்ட பணியினை சிறப்புற செய்து முடித்து, கட்சியின் அமைப்பினை வலுப்படுத்திட உங்கள் எல்லோரதும் ஒத்துழைப்பையும் கோருகிறேன். கட்சி ஊழியர்களும், நண்பர்களும் இது விசயத்தில் எனக்கு கைகொடுப்பார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்.

'தமிழ் மக்களே, உங்கள் குடும்பத்துடன் தமிழரசுக் கட்சியில் உறுப்பினராகச் சேருங்கள். இது உங்கள் கட்சி; இது உங்கள் இயக்கம்.'

—இவ்வாறு திரு. நவரத்தினம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## முஸ்லிம் அமைச்சராகி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இல் ஆங்கில மொழிபெயர்ப்புடன் அனுப்பப்படுகின்றது. இனிமேலாகுதல் தமிழைப் புறக்கணிக்காமல் தமிழுக்கு உரிய இடத்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிவிக்குக.'

—இவ்வாறு கல்வியமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள தந்தியொன்றில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. குறிப்பிட்டுள்ளார்.

---

# இனிமைத் தமிழில் இறை....

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

மாணிக்கவாசகரும், 'தண்ணார்தமிழ்'—என்றார் நீர்மை என்னும் சொல் பல பொருளைக் கொண்டது. அப்பொருள்களில் தமிழோடு இயைந்து வரும் பொருள்களில் இயல்பு என்னும் பொருளும் ஒன்று. இப்பொருளால் தமிழ் இயல்பான மொழி என்பது உணரப்படும். எனவே, தமிழ், இனிமைத் தமிழ்; தண்மைத் தமிழ்; இயல்பு மொழி.

### தமிழ்தெய்வமொழி

கழாரம்பர் என்னும் தொல்லாசிரியர் தமிழின் தனிப்பொருளைக் கூற எழுந்தவர்,

'தமிழ் சிவம் இனிமை எனும் தனிப்பொருளாம்'

—என்று தம் ''பேரிசை'' நூற்பாவில் குறித்தார். அவர்கருத்தில் இனிமைத் தமிழுக்கு முன்னர் சிவத்தமிழ்—தெய்வத்தமிழ்—இறைத்தமிழ் எழுகின்றது. தமிழே இறைவனாய், இறைவனே தமிழாகிறான். தமிழ்ச் சான்றோர் தமிழுக்குத் தந்த இயல்பான தகுதி இறை. இறைவனேயாகும் தகுதியுடையது தமிழ். தமிழும் தெய்வ மொழியே. வடமொழிதான் தேவபாடை என்பதன்று. தென்மொழியும் தெய்வத் தமிழே;

இதனைச்சேக்கிழார் சொல்லிக்காட்டுகின்றார்.

'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' சேக்கிழாரது இந்த உண்மைப் பேச்சில் தமிழ் தெய்வத்தமிழ் மட்டும் அன்று மேன்மைத் தமிழ், மேன்மைத் தெய்வத் தமிழ்; உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாது உலகத்தை அளந்து நிற்கும் தமிழ். ஞாலம் அளந்த தகவால் தமிழ் மன்பதைமொழி. மன்பதை மொழியே தெய்வத் தமிழ ஆகும் தகுதி உடையது.

சுந்தரரும்,

பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடர்''—என்று பரமனைப் பாட்டுத் தமிழ் ஆனவன் என்கின்றார். அவரே,

'பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்'—என்று பாட்டுடைத் தமிழை இறைவனுக்கு ஒப்புக் கூறி உயர்த்தினார்.

### தமிழ் அருள்மொழி

இத்தெய்வத் தமிழால் போற்றியே சமய குரவர் நால்வரும், இறையடியார் பலரும் வியத்தகு அருட்செயல்களை இறைவன் அருளால் செய்தனர்; பெற்றனர் என நூல்களில் காண்கின்றோம்.

தமிழ்ப்பாட்டு வியத்தகு செயல்களை விளைவித்தது.

தமிழ் எழுதப்பட்ட ஏடு நீரில் ஏறி, நெருப்பில் நின்றது. மறைக்காட்டு கதவு திறந்தது; அடைத்தது. ஆண்பனை பெண்பனை ஆகியது. எலும்பு பெண்ணாகியது. நஞ்சு நீங்கியது, நஞ்சு அமுதாகியது. சுடு காளவாய் சுரும்புத் தடாகம் ஆனது. யானை பணிந்தது. கடலில் கல் மிதந்தது. நெல்லும் பொன்னும் சோறும் வந்தன. ஆரூர்த்தெருவில் இறைவனே நடந்தான். இழந்த கண்கள் மீண்டன. முதலையுண்ட குதலை மீண்டான். வெள்ளை யானை வந்தது. நோய்கள் தீர்ந்தது. பகைகள் முறிந்தன. இவ்வாறு பட்டியல் நீண்டது. யாவும் தமிழ்ப்பாடலால் என்று காண்கின்றோம்.

வள்ளலார் இவையெல்லாம் கூட்டி,

'வடிக்குறும் தமிழ் கொண்டு அன்பருக்கு அரு ...

...ளும் வள்ளல்'—என்றார். தமிழ் இறைவனது அருளைப் பெறும் தகுதி உடையது ஆகிறது.

### தமிழ் இறைவன் உணவு

தமிழ்ப்பாட்டு இறைவனுக்கு உவப்பானது; அவனது அருளைச் சுரக்கவைப்பது மட்டும் அன்று, இறைவனுக்கு உணவாகவும் அமைந்தது.

இறைவனை வந்திக்கும் முறைகளுள் வெந்தழல் வளர்த்து வேள்வி செய்யும் முறை; வடவரால் உண்டாக்கப்பட்டுத் தமிழகத்தில் புகுத்தப்பட்டது. திருவள்ளுவப் பெருந்தகையார்,

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர் செகுத்து உண்ணாமை நன்று'

என்று மாற்று முறையால் வேள்வியைக் குறிப்பாகக் கண்டித்தார். இக்குறளில் குறிக்கப்படும் 'அவி' இறைவனுக்கு உரிய உணவு என்னும் பொருளது. இறைவனுக்குரிய உணவாகப் பலிப்பொருள்களை வேள்வி வேள்வியின் தீக்குழியில் நெய் சொரிந்து இடுவர் அஃது அவி எனப்படும். தீயில் வெந்து ஆவியாய் அவிவதால்—ஆவியாவதால் (அவி—ஆவி—அவி) அவி எனப்பட்டது. வேள்வித் தீ இல்லாமலே—வேள்வி செய்ய மாட்டாராய்—தமிழ்ப்பாட்டை அவியாக இறைவனுக்கு ஊட்டினார் திருமூலர். காலையில் பாடி ஊட்டினார். மாலையில் பாடி ஊட்டினார். அதைப் பாடுகிறார்:

'வேட்கி அவி உண்ணும்
விரிசடை நந்திக்குக்
காட்டவும் யாமிலம்;
காலையும் மாலையும்
ஊட்டு அவி யாவன
உள்ளம் குளிர்விக்கும்
பாட்டு அவி காட்டுதும்,
பரல் அவியாமே'

—என்பது அவர் காட்டும் பாட்டு. இதன்கண் உள்ளம் குளிர்விக்கும் பாட்டை அவி என்கின்றார்: தீக்குழி வழியாகச்செல்லாத அவியன்றோ? அதனால் அது குளிர்ந்து பால் போன்ற சுவையான உணவு ஆயிற்றாம்.

வெந்தழல் வளர்க்கும் வேள்வி முறை செந்தமிழ்த் திருமூலர்க்கு ஒத்தது இல்லை போலும். அதனால்தான் ''காட்டவும் யாம் இலம்'' என்று இப்பாடலிலும் குறித்தார் பின்னரும்,

நன்னெறி செல்வார்க்கு ஞானத்தின் ஏகலாம்'

புன்னெறி யாகத்திற் போக்கில்லை தானே'

—என்றார். வேள்வி முறை தாழ்வானது என்பதைப் 'புன்னெறி யாகம்' என்பதால் குறித்தார்.

இப்பாடல் [வேட்டு அவி பாடல்] 'சிவபூசை'யை விளக்கும் பகுதியில் அமைந்த பாடல் என்பதைக் குறிக்க நேர்கின்றது. வழிபாட்டு—பூசை முறையாகத் தமிழ்ப்பாட்டைப் படைத்தலைக் கூறினார் என்பதை இவ்விடத்தில் நினைவிற் கொள்ள வேண்டும்.

### அருச்சனை தமிழ்ப்பாட்டே

இவற்றையெல்லாம் உளத்துட்கொண்டே சேக்கிழார், அருச்சனை பாட்டே ஆகும்'' என்றார். அதனையும் தாம் கூறுவதாக இல்லாமல் இறைவனே சுந்தரமூர்த்தியிடம் ஏவல் இடுவதாக,

''அருச்சனை பாட்டே யாகும்

ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக'' என்றார்.

'தூமறை பாடும் வாயார்' —என்று பாடினார். ... தூமறை பாடும் வாயை

உடையவரையே தமிழ்ப் பாட்டே அருச்சனை ஆகும்'

என்று பேச வைத்துள்ளார் சேக்கிழார். இதில் சேக்கிழாரின் உள்ளெண்ணம் புலனாகின்றது. இறைவன் ''சொற்றமிழ் பாடுக'' என்று சுந்தரரைப் பணித்தான். ஒருவரைத் தமிழில் பாடுவதற்குப் பணித்தவன் மற்றொருவரைத் தமிழ் மந்திரம் பாடுவதற்காகப் படைத்தானும். அவ்வாறு படைக்கப்பட்டவர் திருமூலர்; அவரே பேசுகின்றார்:

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே'

தன்னை நான்றாகத் தமிழால் போற்ற வேண்டுமென்பது இறைவனது பேரவா. அதனால் நன்றாகவே படைத்துள்ளானும். இறைவனே பெரும் புகழ் விரும்பிதான். அந்தப் புகழையும் தமிழால் கேட்பதில் பெருவிருப்பினன். அப்பெருவிருப்பில் இறைவன் தன்னைத்தானே தமிழிற் பாடிக்கொண்டவன். வைணவப் பெரியார் நம்மாள்வாரைக் கருவியாகக் கொண்டு பாடிக்கொண்டான். இதனை, நம்மாள்வாரே,

'அன்றைக் கன்று என்னைத் தன்னாக்கி இன்றமிழ் பாடிய ஈசன்'—

என்று பாடிப்பூரித்துள்ளார். அங்கு நன்றாகப் படைத்தான், இங்கு தானே அடியவராகி நாளுக்கு நாள்—அன்றைக்கு அன்று—ஆக்கிக்கொண்டான். தன் புகழைத் தானே புதிது புதிதாகத் தமிழில் சுவைத்துள்ளான் இறைவன்.

இதுவரை கண்ட சான்றுகளால் தமிழினது தகுதிப்பாடு பல முனைகளில் மிளிர்வதைக்காணலாம். தமிழ் தெய்வமொழித் தகுதி உடையது. அருள்மொழியாம் தகுதிகொண்டது. இறைவற்கு உணவாகும் தகுதி கொண்டது. இறைவற்கு மிக உவப்பாகும் தகுதி கொண்டது. இறைமைக்குரிய இத்துணைத் தகுதிப்பாடுகள் இருந்தும் தமிழ் எவ்வாறு கோவிலில் கருவறைக்கு வெளியே நிறுத்தப்பட்டது? வழிபாட்டு—அருச்சனை—போற்றி மொழியாக வடமொழி எவ்வாறு முடிசூடிக் கொண்டது? எவ்வாறு கருவறைக்குள் தனியாட்சி செலுத்தி வருகின்றது? இந்நிலை தமிழருக்கு ஒரு மானக்கேடான நிலையே. இந்த அளவுக்குத் தமிழரின் சூழல் நெடுங்காலத்திற்கு முன்னரே கெடத் துவங்கிவிட்டது. இக்கேட்டின் துவக்கத்திற்குத் தமிழ்ச் சமயச் சான்றோரும் அறிந்தோ அறியாமலோ ஒரளவில் துணைபோயினர் எனலாம்.

(அடுத்த இதழில் முடியும்)

---

## பொதுவுடமைவாதி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவாளர்கள் ஏங்குகின்றனர். நிலைமை இன்னும் நீடிக்குமாயின் கூட்டுறவு இயக்கம் முற்றாக அழிந்துவிடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

(வவுனியா நிருபர்)

---

## தவறுக்கு வருந்துகிறோம்:

31-10-71 சுதந்திரனில் 7ம் பக்கத்தில் வெளியான 'செல்வாபுரம் ஸ்ரீமாபுரமாகிய விந்தை' என்னும் தலைப்பின்கீழ் வெளிவந்துள்ள செய்தியில் சில தவறுகள் ஏற்பட்டதையிட்டு வருந்துகிறோம்.

(1) செய்தியில் குறிப்பிட்டுள்ளபடி 'செல்வாபுரத்தை ஸ்ரீமா புரம்' என்று மாற்றியதற்கும் கல்லூரி அதிபர் திரு. சண்முகநாதனுக்கும் சம்பந்தம் ஏதும் கிடையாதென்றும், கேள்வியைத் தயாரித்த ஆசிரியரே மேற்படி பெயர் மாற்றத்தை செய்ததாகவும் அறிகிறோம்;

(2) செய்தியில் கூறப்பட்டுள்ளபடி கல்லூரி அதிபர் திரு. சண்முகநாதன் ஒரு இடது சாரி கட்சி அனுதாபியல்ல— ஒரு கட்சியையும் சேராதவர் அவர்.

(3) செய்தியில் குறிப்பிட்டிருந்ததுபோல கேள்வித் தாளில் ஏற்பட்ட பெயர் மாற்றத்தினால் மாணவர்களிடையே எத்தகைய கொந்தளிப்பும் ஏற்படவில்லை. —ஆசிரியர்

---

## அடுத்தவாரம் சூடான அரசியல் மடல்!

---

## தமிழின உரிமைப்போ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள். இந்த நிலையில் எங்கள் தாய் நாடான இலங்கை நாட்டிலே எங்கள்மொழி புறக்கணிக்கப்படுவதை எப்படிச் சகிக்கமுடியும்? எங்கள் அஹிம்சைப்போராட்டம் நியாயமானது. தவறுனல் அதற்காக நாங்கள் சிறை போகவும் உயிர்விடவும் தயாராகவுள்ளோம். இலங்கை அரசு எங்கள் நியாயமான கோரிக்கைகளை வழங்குவதுதான் நியாயமாகும்.

—மேற்கண்டவாறு திரு. தங்கத்துரை பா. உ. சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். -மூதூர்நிருபர்

---

## நமது இலட்சி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கால பெருவாழ்வைப் பிறப்பிக்கும். எனவே தமிழ்ப் பெருங்குடி மக்கள் தத்தம் அன்றாட வாழ்வில் காந்தி மகான் காட்டிய சாத்விக வழியாம் ஒத்துழையாமை என்னும் இலட்சியத்தை மொழி விடயத்தில் ஆட்சியின் கொள்கைக்குப் பலமான எதிர்ப்பாயுதமாக்கிக் கொள்வதைத் தவிர தற்போதைக்கு வேறு எதுவுமே தமிழினத்தின் வெற்றிக்கு வழிகாட்டிட முடியாது. அரசாங்கத்தின் போக்கினை ஆதரிக்கும் அரசியல் கட்சிகளின் நோக்கம் தமிழினத்தை உய்விப்பதற்கல்ல என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்வார்களாக.

---

''அன்பரே பொழுதைப் பொன்னாக்குங்கள். ஒரு நிமிடங் கூட வீணாக்காதீர்கள்.''

—கவியோகி சுத்தானந்த பாரதியார்.

காலம் பெறுமதியானது. துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப்பவுடர், வாங்கிப் பாவித்து நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்துங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தித் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

## 6வது வாரம் வெற்றிகரமாக காட்சியளிக்கின்றது

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை) **இம்பீரியல்** (பாணந்துறை)

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, அசோகன்,
சுந்தரராஜன், ஜோதிலட்சுமி, சோ, ராஜம்மா, விஜயஸ்ரீ, ராமராவ்,

- மற்றும் பலர் நடித்த -

# தேடிவந்த மாப்பிள்ளை

(ஈஸ்ட்மன் கலர்) தயாரிப்பு-டைரக்சன் பி. ஆர். பந்துலு இசை எம். எஸ். விஸ்வநாதன்

---

## 5வது
வெற்றி வாரம்
**கிங்ஸ்லி**
**விஜயா** (மட்டுநகர்)

ஜெய்சங்கர்
கே.ஆர். விஜயா
சுந்தரராஜன்
சௌகார்
ஜானகி

— நடித்த —

# அக்கா தங்கை

---

## இப்பொழுது அமோக வெற்றியுடன் காட்சியளிக்கின்றது



கெப்பிட்டல் — பிளாசா — மைலன்

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, நம்பியார்,
அசோகன், முத்துராமன், விஜயநிர்மலா, விஜயலலிதா,
கீதாஞ்சலி, டி. கே. பகவதி, சோ,

— நடித்த —

# என் அண்ணன்




---

## 2வது மாதம்-சிலோன் என்டர்டெயின்மன்ட் திரைகளில் காட்சியளிக்கிறது

**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்நகர்) **ராஜேஸ்வாரா** (மட்டுநகர்)

ஜெமினிகணேசன்
ஜெய்சங்கர் லட்சுமி
நாகேஷ் விஜயலலிதா
மனோகர் ஸ்ரீகாந்த்

—நடித்த—



கதை — வசனம் — டைரக்ஷன்
கே. பாலசந்தர்

# நூற்றுக்கு நூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் கார்த்திகை மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்